Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தின National Tamil Daily

மலர் 8 (4-6-66) இதழ் 117

பராபவ வைகாசி 22 ஸபர் 14 சனிக்கிழமை

பீடிகளில் சிறந்தது!

இறுதி வரை
இன்பமளிப்பது
முல்லா பீடிகளே

தயாரிப்பாளரும்
விநியோகஸ்தர்களும்:
முல்லா பீடி கம்பனி
கே.கே.எஸ். ரோட் - யாழ்ப்பாணம்.

### யுதாண்ட் ஆலோசனை

நியூயோர்க், ஜூன் 3

தென்வியட்நாம் தேர்தலைப் பார்வையிட ஐ. நா. மேற்பார்வையாளர்களை அனுப்புமாறு கீ அரசாங்கம் விடுத்த கோரிக்கைபற்றி, யுதாண்ட்பாதுகாப்புசபைத் தலைவருடன் இன்று ஆலோசனை நடத்தினர்.

# டட்லிக்கு எதிரான தேர்தல்மனு தள்ளுபடி

## பிரதம நீதியரசர் தீர்ப்பு

கொழும்பு, வெள்ளி

பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா டெடிகம தொகுதியிலிருந்து பார்லிமெண்டுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட மனு இன்று செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த தேர்தல் ஆட்சேப மனு பிரதம நீதியரசர் திரு. எம் ஸி. சன்சோனிமுன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு இன்று காலை தீர்ப்பு வழங்கப்பட்டது.

1665-ம் ஆண்டு மார்ச் 22-ந் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் டெடிகமத் தொகுதியில் தம்முடன் போட்டியிட்ட திரு. ரத்னே தேசப்பிரிய சேனநாயகாவை திரு. டட்லி சேனநாயகா தோற்கடித்து வெற்றிபெற்றார்.

## பொலிஸ் வேலைக்கு 1300 பேர் மனு; யாழ்ப்பாணத்தில் பரீட்சை

யாழ்ப்பாணம், சனி

பொலிஸ் சேவைக்கு புதிதாக கான்ஸ்டபிள்களையும் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களையும் தெரிவு செய்வதற்கான நேர் முகப் பரீட்சைகள் இன்று யாழ்ப்பாணப்பகுதியில் பல இடங்களில் நடைபெற்றன.

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவில் மட்டும் கான்ஸ்டபிள் வேலைக்கு 1294 பேர்களும் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் பதவிகளுக்கு 184 பேர்களும் மனுச்செய்திருக்கின்றனர்.

வடபகுதி பொலிஸ் சுப்ரின்டன்ட் திரு. டி. தளையசிங்கம் உதவிப் பொலிஸ் சுப்ரிண்டன்ட்திரு கே. மகேந்திரன், பொலிஸ் தலைமைப்போக்கு வரத்துப் பகுதி இன்ஸ்பெக்டர் திரு. வி. கே. சுந்தையா, பொலிஸ் பரிசோதகர் ஆகியோர் நேர் முகப்பரீட்சைகளை நடத்தினர். இப்பரீட்சைகள் மூன்று மொழிகளிலும் நடைபெற்றன.

(ந நி)

## எங்கள் பாட்டுக்களை ஒலிபரப்பாதீர்!

### இலங்கை வானொலிக்கு 200 இந்திய உற்பத்தியாளர் கோரிக்கை

பம்பாய், ஜூன் 3

தங்கள் படப்பாட்டுக்களை ஒலிபரப்புவதை நிறுத்துமாறு சுமார் 200 இந்திய படமுதலாளிகள் இலங்கை வானொலியைக் கேட்டிருக்கிறார்கள். இந்திய சலனப்பட உற்பத்தி சங்கம், இந்திய திரைப்பட உற்பத்தி சங்கம் ஆகிய வற்றின் உத்தரவை அனுசரித்து இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஜனவரி மாதம் மேற்கண்ட இருசங்கங்களுடனும் செய்து கொண்ட ஒடபந்தத்துக்கிணங்க இலங்கை வானொலி இப்பாடல்களுக்கான 'ராயல்டி" தொகையைச் செலுத்த மறுத்திருப்பதால், இந்த உத்தரவு வழங்கப்பட்டது.

இலங்கை வானொலி தமிழ் ஹிந்தி இசைத்தட்டுகளைத் தடைசெய்யப்பட்ட ஜூன் 1-ம் திகதிக்குப்பின்ம் ஒலிபரப்பும் என்ற இந்திய பத்திரிகைச்செய்திகளை அடுத்து தொடர்ந்து இலங்கை வானொலிஅவற்றைஒலிபரப்பினால் உரியநடவடிக்கைஎடுத்துக் கொள்ளப்படும் என இந்திய சலனப்பட உற்பத்தியாளர் சங்க பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இவ்விஷயமாக இலங்கை வானொலியுடன் மேற்கொண்டு பேச்சு நடத்தும் உத்தேசம் மேற்கண்ட இரு ஸ்தாபனங்களுக்கும் கிடையாது என்றும் அவர் கூறினார்.

(பி. டி. ஐ.)

## ஜவுளிக் கடைகள் கதவடைப்பு

### கொழும்பை பின்பற்றி யாழ்ப்பாணம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், சனி

வெளி இடங்களிலிருந்து கூப்பன் புள்ளிகளுடன் துணி வாங்க யாழ்ப்பாணம் வந்தவர்கள் நேற்று ஏமாற்றதுடன் திரும்பினர். காரணம் யாழ்ப்பாணத்தில் ஜவுளிக்கடைகள் எல்லாம் பூட்டப்பட்டிருந்தது தான்! ஏமாற்றத்தைச் சமாளித்துக்கொள்வதற்காக பெண்களில் சிலர் சினிமா பார்க்கச்சென்று மனதைத்திருப்திப் படுத்திக்கொண்டனர்.

#### இருப்பு எடுக்க

இருப்பு எடுப்பதற்கும், விலைகள் குறிப்பதற்கும் இன்று விற்பனை இல்லை' என்று ஒவ்வொரு கடை வாசல்களிலும் அறிவிப்பு அட்டைகள் மாட்டப்பட்டிருந்தபோதிலும்; கூப்பன் புள்ளியின்றி வியாபாரம் பல கடைகளில் ஒற்றைக்கதவு மூலம் நடைபெற்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஒற்றைக் கதவு மட்டும் திறக்கப்பட்டிருந்த கடைகளில் கட்டுப்பட்டு விலைகளுக்கு எதிராக வியாபாரம் நடைபெற்றது. கடைவாசலில் நின்றுகொண்டிருந்த சிப்பந்திகள் 'அம்மாவாங்க' 'தங்கச்சி வாங்க' என்று அழைத்துக்கொண்டிருந்தனர்.

காங்கேசன்துறை வீதியிலுள்ள ஒரே ஒரு கடையில் மட்டும், இருப்பு எடுப்பு நடப்பதை நேரில் கண்டேன். இதர கடைகளில் இருப்பு எடுப்பு நடைபெற்றதாகத் தெரியவில்லை. கடைச்சிப்பந்திகள் [illegible]ரும் கடை [illegible]

இருந்து தமாஷாக பேசிக் கொண்டிருந்தார்கள்.

#### போனால் கிடையாது

சில கடைகளுக்குச் செல்லும் பொது மக்களிடம், 'விலையுயர்ந்த துணிகளை இனிமேல் நீங்கள் கண்ணாலும் காண முடியாது. இப்பவே வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று கடைச்சிப்பந்திகள் 'புத்திமதி' கூறுவதாக ஒருவர் தெரிவித்தார்.

கடையை மூடுவதால் நஷ்டம் ஏற்படாதா என்று ஒரு கடைக்காரரிடம் கேட்ட பொழுது, 'கடையைத் திறந்து கூப்பன் புள்ளிகளுக்கு வியாபாரம் செய்வதிலும் பார்க்க, பூட்டுவதால் எவ்வித நஷ்டமும் வராது, என்று கூறினர்.

கொழும்பில் நடைபெறுவதைப் பின்பற்றித்தான் இங்குள்ள பெரிய கடைக்காரர்கள் நடவடிக்கைஎடுக்கிறார்களென்றும், அவர்களைப்பின்பற்றி சின்னக்கடைகாரர்கள் செய்கிறார்கள் என்றும் அறிமுகமான ஒரு கடைச் சிப்பந்தி கூறினார்.

மெயின் வீதியில் உள்ள மூன்று பிரபல ஜவுளிக்கடைகள் மூடப்பட்டு வெளியில் 'போர்ட்டுகள்' தொங்கவிடப்பட்டிருக்கின்றன. இக்கடைச் சொந்தக்காரர்களில் சிலர் அடிக்கடி கொழும்பு ஜவுளி வர்த்தகர்களுடன் தொடர்புகொள்வதாகவும் ஒருவர் கூறினார்,

பெரிய கடையிலுள்ள தையல்கடைகளும் மூடப்பட்டிருந்தன. காரணம் தெரியவில்லை. மொத்தத்தில் நேற்று யாழ்ப்பாண[illegible] போல் காட்சியளித்தது.

## "என்னை நோக்கி சுட்டார்; அருகில் நின்றவர் விழுந்தார்

### பூநகரி கொலை முயற்சி வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், சனி

எதிரியின்வீட்டைத் தாண்டிச்செல்லும்போது 'நில்லடா' என்று எதிரி கூறினார் அப்பொழுது அவர்கையில் துவக்கு வைத்திருந்தார். 'உன்னை முடித்தபின்தான் சாப்பிடுவேன்' என்று எதிரி கூறினார். என்னைக் கெதியாய் முடித்துவிட்டு சாப்பிடு என்று நான் கூறினேன். அதேநேரம் ஐயம்பிள்ளை வந்து சமாதானப் படுத்திய போது வெடிதீர்ந்தது. அந்தச்சூடு என்மீது படவில்லை அருகில் நின்ற ஐயம்பிள்ளை உடனே நிலத்தில் விழுந்தார்.

பூநகரி கொலை முயற்சி வழக்கில் சாட்சியமளித்த சின்னையா சதாசிவம் மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அஸைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு, தம்பையா கியு. சி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 64ம்ஆண்டு மே மாதம் பூநகரிப்பகுதியிலுள்ள நல்லூரில் செல்லையா வல்லிபுரம் என்பவர் சின்னையா ஐயம்பிள்ளை என்பவரைத் துப்பாக்கியினால் சுட்டுக்கொலைசெய்ய முயற்சித்தாரென்றும் அதே இடத்தில் அதேநேரத்தில் சின்னையா சதாசிவத்தைத்துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ய முயற்சித்ததாகவும்

(8 ம் பக்கம் பார்க்க)

நகைகளுக்கு
யப்பான்
ஜூவலர்ஸ்
64, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518 தந்தி: 'யப்பான்"

## திருமண அழைப்பு

இராஜேந்திரன் சாரதா

திரு. T. M. வேலுப்பிள்ளையினதும் (தபால் அதிபர் மானிப்பாய்) திருமதி ஆயிலியம் வேலுப்பிள்ளையினதும் (தலைமை ஆசிரியை, இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை) புதல்வன் செல்வன் இராஜேந்திரனுக்கும், காலஞ்சென்ற திரு இராமச்சந்திரனதும் (இலங்கை புகையிரத சேவை) திருமதி இராமச்சந்திரனதும் புதல்வி செல்வி சாரதாவுக்கும் ஜூன் மாதம் 4-ம் திகதி இரவு 11 மணிக்கும் 12 மணிக்கும் இடையில், இணுவில் சிவகாமி அம்மன் கோவிலில் திருமணம் நடைபெறும்.

இவ்வைபவத்திற்கு உறவினர்களும் நண்பர்களும் பணிவுடன் அழைக்கப்படுகின்றனர்.

திரு T. M வேலுப்பிள்ளையும், பாரியாரும்,
தபால் நிலைய அதிபர் வீடு.
மானிப்பாய்

திரு மா. ஆனந்தரும் பாரியாரும்
ஆனந்த வாசம், இணுவில். 451

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

காணி

யாழ்ப்பாணம் அன்னசத்திர ஒழுங்கையில் 14 கமானியார் வளவில் நான்கு (4) பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மேற்படி விலாசத்தில் தொடர்புகொள்ளவும். 503

## வாடகைக்கு

வீடு

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு அரை மைல் தூரத்தில் சண்டிருப்பாய் பிரதான வீதியில், சிரணிச் சந்தியில் நவீன சுகாதார முறைப்படி கட்டப்பட்ட கக்கூசு, குளியறையோடு, ரெல்லி போன் மின்சார வசதியுள்ள வீடு வாடகைக்குண்டு. Dr. W. சிவகுருநாதன், கட்டுடை மானிப்பாய். நேரில் சந்திக்கவும். 523

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய வுபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கேவுாலடி, யாழ்ப்பாணம்.

## கல்வி

வகுப்புகள்

விசேட சித்திக்கு- பீ. ஏ; ஜி-ஏ-கியூ; ஜி. சி. ஈ. உயர்தரம் ஒரு வருடப் பயிற்சி; சாதாரணம் கலை/விஞ்ஞான வியல்கள்; வர்த்தக வகுப்பு தமிழ்/ஆங்கிலம்; சிங்களம்; தாதிகள் பயிற்சிவகுப்பு ஆண்/பெண் ஆகிய வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. யாழ்ப்பாண டியூட்டோரியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். வதிரி, கரவெட்டி. 505

## கல்வி

வகுப்புகள்

கலை/விஞ்ஞானம்/வர்த்தகம் (தமிழ்/ஆங்கிலம்) க. பொ. த. (சாதாரணம்/உயர்தரம்) G. A. Q., தையல், சிங்களம், ஆங்கிலம், தாதிமார் பரீட்சை, ஆசிரியகலாசாலைப் பிரவேச பரீட்சை, காலை, மாலை வகுப்புகளும் பாடசாலை செல்லும் 6-ம், 7-ம், 8-ம் வகுப்பு பிள்ளைகளுக்கு மாலை வகுப்புகளும் நடைபெறுகின்றன. விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி (ஸ்தாபிதம் 1924) பருத்தித்துறை/வதிரி, கரவெட்டி. (524)


**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
முத்துராமன் - சந்திரகாந்தா
நடித்த
**தெய்வத்திருமகள்**



**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர். - விஜயகுமாரி
நடித்த
**நானும் ஒரு பெண்**


## டிவேலாரா


டப்ளின், ஜூன் 3

83 வயதான ஐரிஷ்தலைவர் ஏமன் டிவேலாரா, மீண்டும் அயர்லாந்தின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிருர். அடுத்த 7 ஆண்டுகள் அவர் இப்பதவியை வகிப்பார்.


REGAL--JAFFNA
NOW SHOWING!
The World Famous
BEATLES
in
**A Hard Day's Night**



கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணு (திருக்கோணமலை)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடேர்ன் (பதுளை)
தீவொளி (நுவரேலியா)



எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமுவிஸ்
**தெய்வத்தாய்**


## காரைநகரில் சுகாதார விழா

காரைநகர், வெள்ளி

காரைநகரில் சுகாதார விழாவைச் சிறப்பாகக் கொண்டாட சுகாதாரப் பரிசோதகர் திரு. து. மகாதேவா ஏற்பாடுகள் செய்துள்ளார்.

விழாக் கொண்டாட்டம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி 10ந் தேதிவரை நடைபெறும் இறுதிநாள்விழாவை வட்டுக்கோட்டை எம் பி திரு. அமிர்தலிங்கம் கொடியேற்றி ஆரம்பித்துவைப்பார். அன்றுகாலை மருத்துவ நிலையத்தில் நடைபெறும் ஒரு போட்டியில் சிறந்த ஆரோக்கியமான குழந்தைகள் தெரிவுசெய்யப்படுவார்கள். இதனுடன் கரபந்தாட்டம், சைக்கிள் ஓட்டப் போட்டி ஆகிய நிகழ்ச்சிகளும், மாலை சொற்பொழிவுகள், நாடகம், கதம்ப நிகழ்ச்சி ஆகியனவும் நடைபெறும்.

## பஸ்கள் வந்தும் அதே நிலைமை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்திலுள்ள பல இடங்களுக்கு தற்பொழுது இரட்டைத்தட்டு பஸ் சேவை விஸ்தரிக்கப்பட்டிருந்தபோதிலும் தொடர்ந்தும் குறுகிய இடங்களுக்கு பிரயாணம் செய்வோர் பஸ் தரிப்பு நிலையங்களில் பல மணி நேரம் காத்துநிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரிக் கருகாமையிலுள்ள யாழ்ப்பாணம் செல்லும் பஸ் தரிப்பு நிலையத்தில் நேற்றுயாழ்ப்பாணம்செல்ல பலர், காலை ஏழரை மணி தொடக்கம் ஒன்பது மணி வரை காத்து நின்றும் பஸ் கிடைக்கவில்லை. இதற்குள் ஐந்து பஸ்கள் தரிப்பு நிலையத்தை கடந்துசென்றன. ஒரு பிரயாணியாகுதல் பஸ்ஸில் ஏற்றப்படவில்லை. பாடசாலைசேவை நேற்று இல்லாதபடியால் நிலைமை மேலும் மோசமான நிலையை அடைந்தது.

பல பாதைகளில் சில முக்கிய இடங்களில் பிரயாணிகள் பஸ்ஸிற்காக காத்துநிற்கின்றனரென்றும் இவற்றை இ. போ. ச. போக்குவரத்து பரிசோதகர்கள் விசாரணைசெய்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் சில பிரயாணிகள் நமது நிருபரிடம் அபிப்பிராயம் தெரிவித்தனர்.




## கொழும்பு

சனி 4 - 6 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் தேவாரங்கள், 7-30 குரல்வவை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப நிகழ்ச்சி.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம், 5-45 இசை

## மகாகும்பாபிஷேகம்

காரைநகர், வெள்ளி

காரைநகர் கருங்காலி போசிட்டி முருகமூர்த்தி கோவிலில் சென்ற வியாழக்கிழமை ஆரம்பமான புனராவர்த்தனப் பிரதிஷ்டை ஏழு நாட்கள் தொடர்ந்து நடைபெறும். 8-6-66 புதன்கிழமை காலை புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது.

## பௌத்த சங்கங்கள் ஆராயும்

பம்பலப்பிட்டி வெள்ளி

வியட்னமில் பௌத்த பிக்குகளுக்கு இழைக்கப்படும் இன்னல்களை தடுப்பது பற்றி ஆராய தென் இலங்கையில் உள்ள சகல பௌத்த சங்கங்களும் இம்மாதம் 14-ம் திகதிகூடவிருக்கின்றன.

## நேரம் தெரியாது!

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்திலுள்ள பல தபால்பெட்டிகளில் தபால் எடுக்கும் நேர விபரங்கள் அழிந்துகிடக்கின்றன, இதனல் பொதுமக்கள் தபால் எடுக்கும் நேரம் தெரியாது திண்டாடுகின்றனர். (ந. நி)

## டொமினிக்கனில் வலதுசாரி அதிபர்

சாந்தா டொமிங்கோ, ஜூன் 3

டொமினிக்கன் குடியரசு ஜனாதிபதி தேர்தலில் வலதுசாரி அபேட்சகர் வெற்றி பெற்றுவருவதாக அறிவிக்கப்பட்டது; கடைசியாக அறிவிக்கப்பட்ட வாக்கு எண்ணிக்கைப்படி 3-ல் 2 பங்கு வாக்குகள் அவருக்குக் கிடைத்திருக்கின்றன.

## இலங்கையும் சேர்ந்தது

லண்டன், ஜூன் 2

புதிதாக அமைக்கப்பட்ட காமன்வெல்த் நட்புறவுச் சங்கத்தில் இலங்கையும் சேர்ந்துகொண்டது. இந்த ஸ்தாபனம் லிவர்பூல் என்னுமிடத்தில் உள்ளது. காமன்வெல்த் நாடுகளிடையே நல்லுறவை வளர்ப்பதே இந்த ஸ்தாபனத்தின் இலட்சியமாகும்.

## செய்மதிகள் மூலம் அவதானிக்கலாம்

லண்டன், ஜூன் 2

இன்னும் சில வருடங்களுக்குள் லண்டனில்நடாத்தப்படும் சத்திரசிகிச்சைகளைத் தகவல் செய்மதிகள் மூலம் இலங்கையிலுள்ள டாக்டர்களும், சத்திரசிகிச்சை நிபுணர்களும் அவதானிக்கக்கூடியதாக இருக்கும்.

கடந்த வாரம் லண்டன் ராயல் வைத்தியசாலையில் டாக்டர்கள் நடாத்திய சத்திர சிகிச்சை ஒன்றை நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் பர்மிங்ஹாம், நியூகாசில், மான்செஸ்டர் ஆகிய இடங்களிலிருந்து டெலிவிஷன் மூலம் வைத்திய மாணவர்கள் அவதானிக்கமுடிந்தது.

மெட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின் — என். பொன்னுராசா, 7-15 செய்திச்சுருள், 7-30 குங்குமம் — மாதர்நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 உரைச்சித்திரம், 10-00 நேயர்விருப்பம்.

## இன்று குருபூசை

திருஞானசம்பந்தர் குருபூசை மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கத்தினரால் வேலக்கைப் பிள்ளையார் கோவிலில் மாலை 4-30 தொடக்கம் கொண்டாடப்படவிருக்கிறது. மாலை 6-30 தொடக்கம் மூத்ததமிழ்மணி தி. எஸ். எஸ். மணிபாகவதர் 'மங்கையர்க்கரசியார்' என்னும் பொருள்பற்றிக் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

# விளம்பரம்

அரசாங்க கேள்விப்பத்திரங்கள்

புகையிரதப் பகுதி

என் 1168-கொடிகாமம்—பருத்தித்துறை கட்டாரத்தில் பணம், பண்டம், பொதிகள் மற்றும் எல்லாவகைச் சிப்பங்களும் கொண்டு செல்வதற்கு லொறிகள் வழங்குதல். கேள்விகள் முடிவு திகதி 18-7-66.

திருகோணமலைக் கச்சேரி

என் 1178-திருகோணமலை—மாவட்டத்திலுள்ள கள்ளுத் தவறணைகளில் 1-7-66 தொடக்கம் 30-6-67 வரைக்கும் கள்ளு விற்கும் உரிமை 19-6-66-ல் விற்கப்படும்.

வவனியா கச்சேரி

என்-1187-1-7-66 தொடக்கம் 30-6-67 வரைக்கும் வவனியா மாவட்டத்திலுள்ள கள்ளுத்தவறணைகளில் கள்ளு விற்கும் உரிமை 13-6-66-ல் விற்கப்படும்.

நீர்ப்பாசனத் திணைக்களம்

என் 1142—யாழ்ப்பாண உபபிரிவில் அம்பலப் பெருமாள் குளம் வாய்க்கால்கள் வெட்டுதல், அக்கராயன் குளத்தில் வான உயர்த்துதல் ஆகிய வேலைகள், கேள்விகள் முடிவு திகதி 28-6 66

இதன் முழு விபரங்களுக்கும் 3-6-66 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் I-ம் பகுதி, II-ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகலகச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உப-தபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம். 2909

## புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம்

காரைநகர் கருங்காலி போசிட்டி முருக மூர்த்தி கோவிலில் வியாழக் கிழமை (2-6-66) தொடக்கம் 7 நாட்களுக்குப் புனராவர்த்தனப் பிரதிஷ்டையும், புதன்கிழமை(8-6-66) காலை 10 மணிமுதல் 12 மணிவரை மகாகும்பாபிஷேகமும்நடைபெறும். (525)

## கேள்வி விளம்பரம்

### நயினதீவு கிராமசபை

தெகிணம் ரேட்டு வேலைக்கு கேள்விகள், 15/6/66 காலை 10 மணிவரையும் என்னல்ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 14-6-66 காலை 12 மணி வரையும் கந்தோர் நேரங்களில் கேள்விப்பணம் ரூபா 100/- ம் பத்திரப்பணம் ரூபா3/-ம் கட்டியதன்பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

பத்தாயிரம் ரூபா பெறுமதியான வேலை செய்யப் பதிவு பெற்றவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் கிராமசபைக் காரியாலயத்திலும் வடபகுதி உள்ளூராட்சி உதவி அதிபர் அவர்கள்காரியாலயத்திலும் அறிந்து கொள்ளலாம்.

தலைவர்

சி. க. தம்பையா

கிராமசபைக் காரியாலயம், நயினதீவு.

1-6-66. 462

### பண்டத்தரிப்பு கிராமசபை

## கேள்வி அறிவித்தல்

### அரசாங்க நன்கொடை வேலை

பண்டத்தரிப்பு சந்தையில் கட்டிடம் கட்டுவதற்கு கேள்விப்பத்திரங்கள் 1966-ம் ஆண்டு ஆனிமாசம் 16-ந் திகதி வியாழக்கிழமை காலை 9-30 மணி வரைக்கும் என்னல் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களுக்குரிய பணம் ரூபா 50/- 15-6-66-ந் திகதி பிற்பகல் 2 மணி வரையும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். ஏனைய விபரங்களை கிராமசபைக் கந்தோரில் அறிந்து கொள்ளவும்.

(ஒப்பம்) இ. இராமலிங்கம்

அக்கிராசனர்

கிராமசபை, பண்டத்தரிப்பு

1-6-66 (463)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்னியோ எல்லையில் இருபகுதி துருப்புகளின் வாபஸ் ஆரம்பம்

## பிராந்தியக் கூட்டுறவில்ஒன்றுபட நான்கு நாடுகள் இணக்கம்

### "சுகர்ணேவுடன் இனிப்பேச அவசியமும் உண்டோ?

—துங்கு மகிழ்ச்சி

பாங்காக், ஜூன் 3

பாங்காக் பேச்சுக்கள் வெற்றிகரமாக முடிவடைந்ததைத் தொடர்ந்து போர்னியோ எல்லையிலிருந்து இந்தோனேஷிய, மலேஸியத் துருப்புக்கள் வாபஸ் பெற ஆரம்பித்துள்ளன.

மலேஸியாவை நசுக்கும் இந்தோனேஸிய முயற்சி முடிவடைந்துவிட்டதால் தாம் ஜனதிபதி சுகர்ணேவுடன் உயர்மட்ட பேச்சு நடத்தவேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது என பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கோலாலம்பூரில் கூறினர்.

அதே சமயம் மலேஸியா மீதான எதிர்ப்பு முடிவுற்றதென்றும், போர்னியோ பகுதியில் துருப்பு விலக்கம் ஆரம்பமாகிவிட்டதென்றும், பாங்காக்கிலிருந்து புறப்படு முன் மலேஸிய துணைப்பிரதமர் துன் ரஸாக் நிருபர்களிடம் தெரிவித்தார்.

"இனி முழு ஒத்துழைப்பை எதிர்பார்க்கலாம்" எனக் கூறிய ரஸாக் இந்தோனேஸியாவின் நல்லெண்ணத்தையும், அந்தரங்க சுத்தியையும்பாராட்டினர்.

இதற்கிடையில் மலேஸியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், தாய்லந்து ஆகிய நாடுகள் ஒரு பிராந்திய கூட்டுறவில் ஒன்று சேர இணக்கம் தெரிவித்திருப்பதாக இந்தோனேஷிய வெளி மந்திரி டாக்டர் மாலிக் குறிப்பிட்டார். சிங்கப்பூரும் இதில் சேரும்படி கோரப்படும் என்றும் அவர் கூறினர்.

தென்கிழக்காசியாவில் பரந்த அளவு நாடுகளை இவ்வாறு ஒன்றுபடுத்த முயலப் போவதாய் தாய்லந்து வெளிநாட்டு மந்திரி திரு. தனத்கோமனும் அறிவித்துள்ளார்.

டாக்டர் மாலிக், தனது பேச்சுக்கள் பற்றி இன்று ஜனதிபதி சுகர்ணேவிடம் விபரம் தெரிவித்தார்.

---

தென்வியட்னும்

## "தேர்தலை பார்வையிட ஐ. நா. பார்வையாளரை அனுப்புக"

### யுதாண்டுக்கு கீ கோரிக்கை

சைகோன். ஜூன் 3

வருகிற செப்டம்பர் மாதம் தென்வியட்னுமில் அரசியல் நிர்ணய சபைக்கு நடைபெறவிருக்கும் தேர்தலைப் பார்வையிட ஐ. நா. பார்வையாளர்களை அனுப்புமாறு பிரதமர் கீ யுதாண்டைக் கேட்டுக்கொண்டிருக்கிருர்-

அரசாங்கத்துக்கும், அரசியல்-மதப் பிரிவு தலைவர்களுக்குமிடையே நேற்று ஏற்பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்து சைகோனில் அரசாங்க எதிர்ப்புக்களை தற்காலிகமாக பௌத்த தலைவர்கள் நிறுத்திவைத்திருக்கிருர்கள்.

அதே சமயம் பௌத்தர்களின் எஞ்சிய எதிர்ப்புக் கோட்டையாகிய ஹூவே நகரைக் கைப்பற்றும் பொருட்டு டாங்கிகளையும், கவச வண்டிகளையும் அரசாங்கம் அனுப்பியிருக்கிறது. 3 தினங்களில் நகரம் பிடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்வியட்னுமில் தேர்தலைப்பார்வையிட ஐ. நா. பார்வையாளர்கள் அனுப்பப்படவேண்டும் என்ற கோரிக்கையை அமெரிக்கா முற்ருக ஆதரிப்பதாய் ஜனதிபதி ஜோன்ஸன் அறிவித்தார்.

---

## சந்திரனின் மேல்பரப்பை காட்டும் 144 படங்கள்

### அமெரிக்க 'சேர்வெயர்' கலம் அனுப்பியது

கேப்கென்னடி, ஜூன் 3

சந்திரனில் இறங்கியுள்ள அமெரிக்க "சேர்வேயம்" கலம், சந்திரனின் மேல்பரப்பைக்காட்டும் 144 படங்களை பூமியிலுள்ள பதிவு நிலையத்துக்கு அனுப்பியுள்ளது.

ஆராய்ச்சி நடத்து முகமாக உலக விஞ்ஞானிகளுக்கு இப்படங்களை வழங்க அமெரிக்கா தயாராய் இருக்கிறதுஎன ஜனதிபதி ஜோன்ஸன் அறிவித்திருக்கிருர்.

சந்திரனில் மனிதன் இறங்கும் காலம் நெருங்கிவிட்டதால். அதுபற்றிய முழுவிபரங்களையும் பரிமாறிக்கொள்ளவேண்டியது அவசியம் என்றும் ஜனதிபதி கூறினர்.

சந்திரனில் மனிதன் பத்திரமாக இறங்க, மென்மையான, அகலமான பகுதிகள் இருப்பதை போட்டோ படங்கள் காட்டுகின்றன. 'சேர்வேயர்' கலம் சேதம் எதுவுமின்றி நல்ல நிலையில் இறங்கியிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. மேலும் பல படங்களை அமெரிக்க கலம் அனுப்பும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது,

நேற்று இப்படங்களை லட்சக்கணக்கான மக்கள்டெலிவிஷனில் கண்ணுற்றனர்.

இதற்கிடையில் இரு மனிதர்களைக்கொண்ட வான வெளிக்கப்பலை இன்றிரவு அமெரிக்கா அனுப்புகிறது. வானத்தில் தொடர்பு ராக்கெட்ஒன்றுடன் அது இணைக்கப்படும். இரு விண்வெளி வீரர்களில் ஒருவர், அப்போது அயன வெளியில் இரண்டரை மணி நேரம் நடக்கும் அற்புதத்தை செய்து காட்டுவார் என அறிவிக்கப்பட்டது.

---

## சுவர்ண்சிங்கும் தினேஷ்சிங்கும்

லண்டன், ஜூன் 3

இந்திய வெளிமந்திரி சர்தார் சுவர்ண்சிங்கும், பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சும் தனித்தனியாக வெளியிட்டுள்ள அறிக்கைகளில் இரு சாரரின் பேச்சுக்களும் திருப்தியளித்திருப்பதாய்க் கூறப்பட்டுள்ளது. சீன அணுசோதனை உட்பட பல சர்வதேச விஷயங்கள் விவாதிக்கப்பட்டன.

திரு. சிங் இன்று லண்டனில் பிரிட்டிஷ் பிரதமர் வில்சன், வெளிநாட்டுமந்திரி நிதிமந்திரி, சாம்ராஜ்ய உறவுமந்திரி ஆகியோருடன் பேச்சு நடத்துகிருர்.

இதற்கிடையில் ராஜாங்க உதவிவெளிமந்திரி திரு. தினேஷ்சிங் பெல்கிரேட்டில் ஜனதிபதி டிட்டோவைச் சந்தித்து உத்தேச முத்தரப்பு உயர்மகாநாடு பற்றிப் பேசினர்.

---

## 'திபேத்தை ஆதரிப்போம்'

புதுடில்லி, ஜூன் 3

திபேத்திய மக்களின் இலட்சியத்தை தொடர்ந்து ஆதரிப்போம் எனசீனவுக்கு அனுப்பிய குறிப்பொன்றில் இந்தியா கூறியிருக்கிறது.

திபேத்தின் நிலைபற்றி ஐ. நா. இயற்றிய தீர்மானத்தை இந்தியா ஆதரித்திருப்பது தனது உள்விவகாரங்களில் குறுக்கீடுசெய்வதாகும் என சீன குற்றஞ்சாட்டியுள்ளதற்குப் பதிலளிக்கும் வகையில் இக்குறிப்பு அனுப்பப்பட்டது.

சீனவின் குற்றச்சாட்டை நிராகரித்துள்ள இந்தியா, தனது உள்விவகாரமான காஷ்மீருக்கு சுயநிர்ணய உரிமை வழங்குவது பற்றிப் பேசுவதின் மூலம் இந்தியாவின் உள்விவகாரங்களில் சீன தான் குறுக்கீடு செய்கிறது என்றும் பதில் குற்றம் சாட்டியுள்ளது.

திபேத்தின் ஆதார உரிமையையும், சுதந்திரத்தையும் நசுக்கும் சீனவின் செயலை ஐ. நா. கண்டித்திருக்கிறது.

திபேத் அகதிகளின் துன்பத்தைத் துடைக்கும் விஷயத்தில் இந்தியா தொடர்ந்து ஆதரவு காட்டிவரும் என இந்தியக் குறிப்பு கூறுகிறது.

---

## கோவா முதல் மந்திரி உண்ணுவிரதபயமுறுத்தல்

### பஞ்சாபில் ராஷ்டிரபதி ஆட்சி ஏற்படும்?

புதுடில்லி, ஜூன் 3

பஞ்சாபி சுபாவிலும், ஹரியாணுவிலும் கட்சித் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் காங்கிரஸ் உடன்பாடு காணவிடில், பஞ்சாபில் ராஷ்டிரபதி ஆட்சி ஏற்படலாமெனப் பலத்த வதந்திகள் உலாவுகின்றன.

முக்கிய அரசியல் முடிவுகள், குறிப்பாக பஞ்சாபி சுபா பற்றிய முடிவு இந்த வார இறுதியில் மேற்கொள்ளப்படுமெனத் தெரிகிறது. அதற்குள் வெளிநாட்டுமந்திரி திரு. சுவர்ண்சிங் லண்டனிலிருந்து திரும்பிவிடுவாரென்றும், திரு. ஜகஜீவன் ராம் தனது ஜெனீவா பயணத்தை ரத்துச்செய்துவிட்டாரென்றும் கூறப்பட்டது திரு. காமராஜ் திட்டமிட்டதற்கு முன்பாகவே டில்லி வந்துவிட்டார்.

கோவாவின் எதிர்காலம் குறித்தும் இவ்வாரம் ஒரு முடிவு எடுக்கப்படும். கோவா பற்றி இம்மாத இறுதிக்குள் ஒரு முடிவு செய்யாவிட்டால் உண்ணுவிரதம் இருக்கப்போவதாய் கோவா முதன்மந்திரி திரு. பர்தோத்கார் நிருபர்களிடம் கூறினர்.

---

## 'டைம்ஸ்' கூற்று தவருனது

வாஷிங்டன், ஜூன் 3

ஐரோப்பாவிலுள்ளதனது படைகளை, பெரிய அளவில் வாபஸ் பெறும் நோக்கம் அமெரிக்காவுக்கு கிடையாதென பாதுகாப்புமந்திரி திரு மக்னமாரா கூறியிருக்கிருர்.

1971-ம் ஆண்டுக்குள் இப்படிச்செய்ய அமெரிக்கா உத்தேசித்திருக்கிறது என லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை எழுதியிருந்ததற்குப் பதிலளிக்கும் வகையிலேயே மக்னமாரா இத்தகவலை வெளியிட்டார்.

மாருக, 2 1/2 லட்சம் அமெரிக்கப்படைகள் ஐரோப்பாவில் தொடர்ந்து பராமரிக்கப்படும் என்றும் அவர் கூறினர்.

---

## சொற்சுருக்கம்; பொருட்பெருக்கம்

சென்னை, ஜூன் 3

சொல் சுருக்கமும் பொருள் பெருக்கமும் கொண்ட சிறப்பைக் கொண்டது திருக்குறள் என ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினர். மைலாப்பூரில் திருவள்ளுவரின் வெண்கலச் சிலை ஒன்றை திறந்து வைத்துப் பேசிய போதே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

---

## அணுசக்தி படைத்த பிரிட்டிஷ் நீர்மூழ்கி

லண்டன், ஜூலை 2

முற்றிலும் பிரிட்டனில் உருவாக்கப்படாத முதலாவது அணுசக்தி படைத்த நீர்மூழ்கிக் கப்பலான 'வலியண்ட்' ஜூலை மாதம் பிரிட்டிஷ் ராயல் கடற்படையுடன் சேர்ந்து இயங்கவிருக்கிறது.

இந்தப் பிரமாண்டமான நீர்மூழ்கிக்கப்பல் 4,000 தொன் எடையுள்ளது. இதில் சக்திவாய்ந்த கடற்பீரங்கிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

---

"அப்போதே

## ராஜாஜி ஒத்துழைத்திருந்தால் காங்கிரஸ் வென்றிருக்காது"

### முஸ்லிம் லீக் தலைவர் பேச்சு

சென்னை, ஜூன் 3

காங்கிரசை பதவியிலிருந்து விரட்டுவதற்கு முஸ்லிம் லீக் எல்லா எதிர்க்கட்சிகளுடனும் உடன்பாடு செய்துகொள்ளத் தயாராய் இருக்கிறது என லீக் தலைவர் முகம்மது இஸ்மாயில் கூறினர்.

'காங்கிரஸ் எங்களுடன் ஏதாவது உடன்பாடு செய்துகொள்ளவந்தாலும் அதை ஏற்கமாட்டோம். சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்டவரை ஏற்கனவே சுதந்திரா-தி. மு. க.-முஸ்லிம் லீக்உடன்பாடு இருந்து வருகிறது. ராஜாஜி தான் இதைச் செய்துவைத்தார். தேர்தல் கூட்டுகள் செய்வதில்லைஎன பம்பாயில் சுதந்திர கட்சி செய்துள்ள தீர்மானம் சென்னையில் ஏற்கனவே இருந்துவரும் ஏற்பாட்டைப் பாதிக்காது என நம்புகிறேன். வரப்போகும் தேர்தலில் எந்தெந்தத்தொகுதிகளில்எந்தெந்தகட்சிஅபேட்சகர்களை நிறுத்துவதென்பதுபற்றி மூன்று கட்சித்தலைவர்களிடையேயும் பேச்சுக்கள் நடந்து வருகின்றன' என்றும் இஸ்மாயில் கூறினர்.

'ஜில்லாக்களில் மட்டுமின்றி சென்னை நகரிலும் முஸ்லிம் லீக் போட்டியிடும். 1962-ம் ஆண்டு தேர்தலிலேயே ராஜாஜி ஒத்துழைத்திருந்தால் காங்கிரஸ் மெஜாரிட்டிபெற்றிருக்கமுடியாது. கேரளத்தில் எப்போதுமே காங்கிரஸுக்கு மெஜாரிட்டி கிடைத்ததில்லை. சென்னையில்கூட 1952-ல் காங்கிரஸுக்கு மெஜாரிட்டி இல்லை அப்போது கூட்டு அரசாங்கம் அமைக்கும்படி ராஜாஜியிடம் போய்க்கெஞ்சவேண்டியிருந்தது என்ருர் முகம்மது இஸ்மாயில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நாம் வாழ்வதும் சாவதும் இறைவனின் கையில் தானுள்ளது. நாள் பூராவும் அவரை நினைப்பது நல்லது. அது முடியாவிடில், தினசரி சில நிமிடமாவது அவரை நினைக்கவேண்டும். நமக்கு அவர் செய்யும் பல உபகாரங்களுக்கும் நாம் நன்றி செலுத்தாவிடில் வாழ்க்கையே அர்த்தமில்லாமற் போகும்.

—மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49 JAFFNA
Telegrams: ... Phone: 38

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு வைகாசி மீ 22 உ (4-6-66)

## பொலிஸ் அதிகாரியின் முன்மாதிரி

கிணற்றுக்குள் விழுந்து உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த ஒரு பெண்ணை, கடமை முடிந்து இளைப்பாறுவதற்காக நள்ளிரவுக்குப்பின் வீடு திரும்பிய யாழ்ப்பாணம் உதவிப்பொலிஸ் சுப்ரின்டன்ட் கிணற்றுள் குதித்து வெளியேஎடுத்து உயிரைக் காப்பாற்றி இருக்கிறார். அவரது தீரச்செயலைப் பாராட்டுவதுடன் பொதுமக்களுக்குப் பொலிசார் எவ்வாறு உதவியாக இருக்கவேண்டுமென்பதற்கு உதாரணமாக அவர்நடந்துகொண்டதற்காகவும் அவரைப் பாராட்டவேண்டும்.

பொலிஸ் உத்தியோகம் பொதுமக்களைப் பயமுறுத்தி அவர்களை அடக்கி; ஒடுக்கி வைக்க வேண்டுமென்ற மனப்பான்மை அந்நியராட்சிக் காலத்தில் இலங்கையில் மட்டுமல்ல, அந்நியர் கையில்சிக்கியிருந்த இதரமல நாடுகளிலும் நிலவி வந்தது. தங்கள்ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழாமல் தடுக்கும் பொருட்டு அவர்களுக்கு இந்தமுறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. துரதிர்ஷ்டவசமாக இந்த மனப்பான்மை நாடு விடுதலையடைந்த பின்னரும் சில பொலிஸ் உத்தியோகத்தர்களிடமிருந்து நீங்கவில்லை. இந்நாட்டிலுள்ள சிறுபான்மை இனமக்கள் விஷயமாக முன்னைய அரசாங்கங்கள் கடைப்பிடித்தகொள்கை அடக்குமுறை மனப்பான்மை கொண்ட சில பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அதிக வாய்ப்பளித்தது. இதன்விளைவாகப் பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் நல்லுறவு இல்லாமல் போனதுடன் அதிருப்தியும் ஏற்பட்டது. சிறுபான்மை இனத்தவர் பெரும்பான்மையினராக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலிஸார் மீது பொதுமக்கள் அதிருப்தியும் அவநம்பிக்கையும் கொள்ளநேர்ந்தது. இன்று இந்நிலை சிறிதுசிறிதாக மாறிவருகிறது. பொலிசார் பொதுமக்களுக்குப் பாதுகாப்பளிப்பவர்கள் என்ற நம்பிக்கை கிணற்றுள் விழுந்தபெண்ணை உதவிப் பொலிஸ் அதிகாரி காப்பாற்றியதன்மூலம் வலுப் பெற்றுள்ளது.

இந்தநம்பிக்கைமேலும் வலுப்பெற்று பொதுமக்களும் பொலிசாரும் ஒத்துழைத்துநாட்டில்குற்றச் செயல்கள் நடைபெறுமல் தடுக்கவேண்டும். இதற்கு அந்தந்த மாகாணங்களில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அந்தந்தப் பகுதி மக்களின் மொழி தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். பொதுமக்களின் மொழி தெரியாதவர்கள் அவர்களுடன் பழகுவதோ அவர்களை அறிந்து கொள்ளவோ அவர்களின் ஒத்துழைப்பையும் நல்லுறவையும் பெறுவதோ சுலபமல்ல.

இந்த உண்மையை, பொலிஸ் சேவையில் நீண்டகால அனுபவமும் பொலிசாரையும் பொதுமக்களையும் நன்கு அறிந்தவருமானபுதியபொலிஸ் அதிபர் அறிந்திருப்பார். எனவே பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் நல்லுறவும் ஒத்துழைப்பும் வலுப்பெற அவர் ஆவன செய்வாரென எதிர்பார்க்கலாம்.

## ஆஸ்பத்திரிகளினால் என்ன பயன்?

ஆஸ்பத்திரிகளையும் வைத்தியசாலைகளையும் விஸ்தரித்து பெரிய கட்டிடங்களாகக் கட்டுவதனாலோ தளவாடங்களை அதிகம் வாங்கி அடுக்குவதனாலோ பயன் எதுவும் இல்லையென்றும் ஆஸ்பத்திரிகளிலும் வைத்தியசாலைகளிலும் கடமையாற்றும் ஊழியர்களும் வைத்தியர்களும் அந்தஸ்தாபனங்களுக்குப் பொறுப்பானவர்களும் மனிதத் தன்மையுடன் நடந்துகொண்டாலே அவற்றினால் பயன் கிடைக்குமென்றும் அர்த்தப்படும் வகையில் இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் சென்னையில் ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருப்பது நம் நாட்டிலுள்ள ஆஸ்பத்திரி ஊழியர், வைத்தியர் மற்றும் அதிகாரிகளின் கவனத்தை ஈர்ப்பதாக இருக்கவேண்டும்.

நம் நாட்டிலும் ஆஸ்பத்திரிகளும் ஆஸ்பத்திரிக் கட்டிடங்களும் அதிகரித்துக்கொண்டேயிருக்கின்றன. ஆஸ்பத்திரி ஊழியர் தொகையும் வைத்தியர் தொகையும் பெருகிக்கொண்டேயிருக்கிறது. இது நோயாளர் பெருகுவதையே காட்டுகிறதாகையால் நாட்டின் வலிமைக்கு நல்லதல்லத்தான். நோயாளர்கள் குணமடைந்து சுகதேகிகளாக்கவேண்டிய பெரும் பொறுப்பும் கடமையும் வைத்தியர்களிடமும் ஆஸ்பத்திரி ஊழியர்களிடமும் உள்ளன. மருந்துகளினால் மட்டுமல்லவைத்தியர்களினதும் ஊழியர்களினதும் கனிபேச்சும் பராமரிப்பும் நோய் குணமடைவதற்கு அவசியம். மருந்து தட்டுப்பாடுநிலவும்நமதுஆஸ்பத்திரிகளில் கனிவானவான பேச்சும் பராமரிப்பும் மிகமிக அவசியம். ஆனால் இதை நமது ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் வைத்தியர்கள், ஊழியர்கள் பலரிடத்தில் காண்பது கஷ்டமாக உள்ளது. இந்திய அறிஞரும் ஜனாதிபதியுமான டாக்டர் ராதாகிருஷ்ணனின் யோசனை இங்கும் பயனளிக்க வேண்டுமென்பதே நமது நோக்கம்.

இன்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூஜை

## ஆளுடையபிள்ளையார் அருளிய அற்புதக் காட்சிகள்

**க. வை. ஆ. சர்மா**

மூன்று வயசுப் பாலன். மழலைமொழி பேசும் பருவம். ஏடுதொடக்கி எழுத்துக்கூட அறியாத நிலை. பெற்றோரைத் தவிரப் பிறவொன்றும் அறியாத குழந்தை, பலநெடுங்காலம் குருமுகமாகக் கற்றுத் தேர்ந்த மகா பண்டிதர்களும், நினைந்து நினைந்து சிந்தித்துவியக்கத்தகும் அற்புதக்காட்சிகளை அமைத்து அழகிய திருப்பாசுரங்களைப் பாடியது என்றால் நம்ப முடிகிறதா? நம்பலாம் ஆனால், அது சாதாரண மனிதக் குழந்தையாக இருக்காது. அப்படியும் கூறமுடியாமலிருக்கிறது.

தென்பாரதத்திலே சோழவள நாட்டிலே, சீர்காழிப்பதியிலே கவுணியர் மரபிலே வந்த சிவபாதவிருதயர் என்னும் அந்தணரும் அவர்தம் பத்தினியார் பகவதியாரும் மனிதர்களே. சிவனடி மறவாத சிந்தை கொண்டவர் என்னும் பொருளமைந்த "சிவபாதவிருதயர்" என்ற திருப்பெயர் அவ்வந்தணருக்கு இடுகுறியளவாய் மாத்திரம் அல்ல, காரணப் பெயரும் ஆயிற்று. அவரது தேவி பகவதியாரும்மோ சிவபாதவிருதயத்தையேபகவானாகக் கருதும் பாக்கியசாலி. அவ்வம்மையார் பத்து மாசம் சுமந்து கருவுயிர்க்க அவதரித்ததே அக்குழந்தை. அதனால், நிச்சயமாக அது மனிதக் குழந்தையேதான். ஆயினும், அது தவக்குழந்தை. அவ்விரு பெரியாரும் ஒரே சிந்தனையினராய் 'புறச்சமய இருள்நீக்கிச் சைவசமயத்தை நிலைநாட்ட வல்ல சமயாசாரியர் தோன்ற வேண்டும்" என்ற கருத்தோடு பலகாலஞ் செய்த தவப்பயனே மனிதக் குழந்தையாக உதித்தது.

சாதாரண மக்களும் சிவனடி மறவாத சிந்தையோடு தவமியற்றினால் சிவத்துவப் பேற்றையடையலாம் என்ற உண்மையை உலகினர்க்கு உணர்த்த உதித்த அக்குழந்தையை உலக அம்மையும் அப்பனும் அந்த மூன்றாம் பருவத்திலே நேரே வந்து ஆட்கொண்டனர். அதனால் அக்குழந்தை ஆளுடைய பிள்ளையார் எனப் போற்றப்பட்டது. பெரியநாயகிஅம்மையார் பரஞானம் அபரஞானம் என்னும் தமதுதிருமுலைகள் சுரந்த ஞானப்பாலை அக்குழந்தைக்கூட்டியமையால் அவர் ஞானசம்பந்தம் பெற்றார். அந்த அருள்வள்ளல் அப்படிப் பாடுவது வியப்பன்று நம்பலாம். அவற்றுட் சிலவற்றையாவது கண்டு இன்புறுவோம்.

### குழந்தைக் காட்சி

அறமூப்படைந்து அனுபவம் முதிர்ந்த அருந்தவர் அப்பர் சுவாமிகள். விரகு அறியாத பிஞ்சு உள்ளம் வெதும்பப்பொருது அம்மை அப்பர் கொடுத்த ஞானப் பால் மிடுக்கினால் வித்தகரான குழந்தை ஆளுடைய பிள்ளையார், அவ்விருவரும் ஒன்றிக் கலந்து, இறைவழிபாடுசெய்துகொண்டு, திருவீழி மிழலைத் திருப்பதியில், தனித்தனி மடங்களில் அடியார்கூட்டம் சூழ வீற்றிருக்கின்றனர்,

அக்காலம் மழைவறந்து விளைவுகுன்றிப் பஞ்சம் நேர்ந்தது. உலகில் பசிநோய் பரவியது. கடவுளை நம்பினோரும் கைவிடப்படுவரோ என அவ்விருவரும் கருத்திற்கொண்டு கண்ணுறங்கினர். எம்பிரானார் அவ்விருவரது கனவிலுந்தோன்றி, மற்றைநாள்முதல் ஆலயத்து வாயிற்படிகளில் அளிக்கும் பொற்காசுகளை முறையே பிள்ளையாரும் வாகீசரும் பெற்று அடியார் பசி போக்கும்படி பணித்தனர்,

அப்படியே அடுத்தநாள் முதலாக இருவருக்கும் படிக்காசு கிடைப்பதாயிற்று. ஆயினும் திருவீழிமிழலை நாதர் பிள்ளையாரது குழந்தை மனதை உலகிற்கு உணர்த்தவிரும்பிப்போலும் மாற்றுக் குறைந்த காசைப் பிள்ளையாருக்கும் உழவாரப் பணியின் உயர்வைக் காட்டப்போலும் மாற்றுக்கூடிய காசை அப்பர் சுவாமிகளுக்கும் வழங்கினர். அதனால் சம்பந்தர் திருமடத்தில் உணவு வழங்கக் காலந்தாழ்த்தியது. அதனை உணர்ந்த பிள்ளையார், பெற்றாரிடத்தே பிள்ளைகள் உரிமையோடு வாதாடுவது போலத் திருப்பதிகம் பாடுகின்றார்.

"வாசி தீரவே
காசு நல்குவீர்
மாசின்மிழலையீர்
ஏசலில்லையே"

என்றும்,

இறைவராயினீர்
மறைகொள்மிழலையீர்
கறைகொள்காசினை
முறைமை நல்குமே"

என்றும் இவைபோலப் பதிகம் பாடியவுடன் வாசியில்லாக்காசு உடன் கிடைத்தது. இந்த அருங் காட்சியை உள்ளம் ஒன்றுபட உணருவோமாயின் நாமெல்லாம் ஆண்டவனது குழந்தைகள் என்ற கருத்து எம்மைவிட்டு நீங்காது.

### இயற்கை விசித்திரக்காட்சி

இயற்கைப்பொருள்களின் நடமாட்டத்தில் எல்லாம், இறைவனது திருவருள் திறம் விளங்கும் இயல்பை சம்பந்தசுவாமிகள் கண்டு வியந்து, திருவையாற்றுத் திருப்பதிகத்தில், ஒருதனிப் பாணியில் அமைத்துக்காட்டியிருக்கும் விசித்திரம் நினைந்து நினைந்து போற்றி இன்புறத்தக்கது.

"வலம்வந்த மடவார்கள்
நடமாட முழவதிர
மழையென்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து
மரமேறிமுகில்பார்க்கும்
திருவையாறே"

திருவையாற்றுத் திருப்பதியின் வீதியிலே மகளிர் நடனமாடியபடி வருகின்றனர். அதற்கேற்ப முழவம் (மிருதங்கம்) அதிர்கிறது. வீதியில் உலாவும் சில வானரங்கள் இக்காட்சியைக் காண்கின்றன, மந்திகள் தமக்கென இருப்பிடம்தேடியமைப்பதில்லை. அவைமரங்களிலேயே வசிப்பன. மழை வந்தால் எங்காவது மரப் பொந்துகளில் பதுங்கிக் கொள்ளும் இயல்பின. பெண்களின் நடனத்தை மந்திகள் மயிலாட்டம் என எண்ணுகின்றன. மழை வரும் அறிகுறி கண்டால் மயில்கள் ஆடலாம். மழைக்கு அறிகுறி இடிமுழக்கம். மிருதங்க ஓசை இடிமுழக்கமாகக் கேட்கிறது குரங்குகளுக்கு. உடனே அவை மர உச்சிக்குப் பாய்ந்து ஏறி முகில் கூட்டம் உண்டோ எனப் பார்க்கின்றனவாம் திருவையாற்றில். என்னே! அற்புதம்!!

"மான்பாய வயலருகே
மரமேறி மந்திபாய்
மடுக்கள் தோறும்
தேன்பாய மீன்பாயச்
செழுங்கமல மொட்டலருந்
திருவையாறே"

வயற்புறமாக மான்கள் பாய்ந்து ஓடுகின்றன. அதனால் அதிர்ச்சியடைந்த மந்திகள் மரங்களிலே பாய்ந்து ஓடுகின்றன. அந்த

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

இலங்கையிலுள்ள நாம் அதிர்ஷ்டசாலிகள். எப்படி என்று கேட்டீர்களா? சென்னையிலிருந்து கிடைத்த தினசரிப் பத்திரிகைகளைப் பார்த்தேன். அங்கு வெயில் 107 முதல் 120 டிகிரி வரையிலும் கொளுத்துவதாயும், பலர் வெயில் தாங்காமல் மாண்டதாகவும் படித்ததும் நல்லவேளை இச்சமயம் நாம் இலங்கையிலே இருக்கிறோமென்று ஆறுதலேற்பட்டது.

சமீபத்தில் தமிழகத்துக்குச் சென்று திரும்பிய ஓர் அன்பர், அங்கு அனல் காற்று அடிப்பதாயும், மின் விசிறியின் கீழிருக்கவும் முடியவில்லை என்றும் சொன்ன போது இங்கு சுகமாக "சோளகக்" காற்று வீசியது. இப்போது சென்னையிலுள்ளவர்களை விட நாம் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் என்பதை அந்தக் காற்று கூறாமல் கூறியது. நம்மைவிட அவதிப்படுபவர்களைக் கண்டு ஒப்பிட்டுப் பார்த்தால், நம்மைப்பற்றி நாம் திருப்தியடைவோமல்லவா?

யாத்திரையாக இந்தியா செல்லவிரும்புபவர்கள் இந்தக் கோடைகாலம் மாறியபின் புறப்படுவது நல்லதென்று கூறவிரும்புகிறேன்.

இன்று திருஞானசம்பந்தசுவாமிகளின் குருபூசை. மதுரையிலே அக்குரவரின் பெயரால் ஆதீன மடாலயத்தில் நடைபெறும் குருபூஜை மகோற்சவப் பத்திரிகை கிடைத்தது. சென்ற செவ்வாய்க்கிழமை முதல் இன்று சனிக்கிழமை வரை நடைபெறும் மகோற்சவ நிகழ்ச்சிநிரலைக் கேளுங்கள். முதல்நாள் செவ்வாய் மடாலய விநாயகர் வழிபாடு. மறுநாள் விசாகம் மடாலய முருகக்கடவுள் வழிபாடு; வியாழனன்று திருஅவதாரம், திருஞானசம்பந்தசுவாமிகள் மதுரை மீனாட்சி கோவிலிலிருந்து தங்கச் சப்பரத்தில் ஆவணிமூல வீதி எழுந்தருளல், வெள்ளிக்கிழமை கோவிலில் ஞானப்பால் அருந்தல், சுவாமி எழுந்தருளல்.

இன்று சனிக்கிழமை அறுபத்துமூன்று நாயன்மார்களுடன் மடாலயத்துக்கு எழுந்தருளி, திருக்கூட ஆராதனைகள் முடிந்தபின், திருமணக்காட்சியுடன் தங்கச் சிவிகையில் ஆவணிமூல வீதி எழுந்தருளல். பகல் ஒரு மணிக்கு மடாலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகளும் ஞானசம்பந்தப்பெருமான் சிவஜோதியில் கலக்கும் ஐபதிபக்காட்சியும் பின்னர் மகேசுவரபூஜை இரவு 8 மணிக்கு கோவில் திருக்கல்யாண மண்டபத்திலிருந்து சுவாமிகள் வெள்ளிக் கோரத்தில் ஆவணிமூல வீதிக்கு எழுந்தருளல்.

குறிப்பு;- குருபூசை மகோற்சவத்தை முன்னிட்டு மூன்று நாட்கள் தேவார விழாவும், தேவார இன்னிசை அரங்குகளும், கோவில் தெற்கு ஆடி வீதியிலுள்ள திருஞானசம்பந்தர் தேவாரப் பாடசாலை முன்பாக நடைபெறும். புதன் இரவு மதுரை ஆதீன மகாவித்வான் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் ஞானசம்பந்தப்பெருமானைப்பற்றியும், 2-ந் திகதி வெள்ளிக்கிழமை மதுரை ஆதீன சைவசமயச் சண்டமாருதம் ஆறுமுகநாவலர் அவர்கள் "திருநாவுக்கரசு நாயனார்" பற்றியும், 3-ந் திகதி வெள்ளிக்கிழமை மதுரை ஆதீன சித்தாந்த சைவ வித்தகர் வயிநாகரம் வே. ராமநாதன் செட்டி

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'அருள் கூறும் அழகு மொழியே தமிழ் மொழி'

சுழிபுரம், வெள்ளி

''ஒவ்வொரு மொழியும் ஒவ்வொரு குறிப்பிட்ட துறையில் சிறந்து விளங்குகின்றன. தூதுமொழியாக பிரெஞ்சும், வணிக மொழியாக ஆங்கிலமும், காதல் மொழியாக இத்தாலியும் விளங்குவது போல் அருளை அழகுறக்கூறும் மொழியாகத் தமிழ் விளங்குவது நமக்குப்பெருமையளிப்பதாகும். கிறிஸ்தவ மதத்தைப்பரப்ப வந்த அறவோர் அறத்தையும், அருளையும் சீராகப் பரப்பத் தமிழையே ஏற்ற மொழியாகக் கொண்டனர். திருவாசகத்தைப் படித்த போப் அதன் அருள் மொழியில் திளைத்து ஆங்கிலத்திலேயே மொழிபெயர்த்துவிட்டார்'' என்று சென்னை பச்சையப்பன்கல்லூரி தமிழ் விரிவுரையாளர்திரு. சி. பாலசுப்பிரமணியம் வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில குறிப்டார். வட்டுக்கோட்டை தமிழ்ச்சங்கஆதரவில் நடைபெற்ற இவ்விழாவுக்கு சங்கத்தலைவர் புலவர் எஸ். பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

திரு. சி. பாலசுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

பொருள் வாழ்க்கையில் சிறந்துவிளங்கும் அமெரிக் காவிற்கூட அருளின் திறத்தை மெல்ல மெல்ல உணரத்தலைப்பட்டுள்ளனர் இந்தவகையில் தமிழ்நாட்டவர்களுக்கு அருட்பாடல்கள் உள்ளது எவ்வளவோ உதவியாக இருக்கின்றது. நாயன்மார்கள் பலரது வாழ்க்கைகளை எண்ணிப்பார்க்கும் போது அவர்களுடைய அருள் நெஞ்சம் எவ்வளவு விரிந்து கனிந்து தெய்வீக வாழ்க்கையை மேற்கொண்டுள்ளது என்பதை உணரலாம். பொருள்கொண்டு கட்டிய கோவிலைவிட அருள்கொண்டு கட்டிய கோவிலையே இறைவன் விரும்பியுள்ளதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும்.

### நிலையற்றவாழ்வு

இந்தவாழ்வு நிலையானதா? இல்லவேயில்லை. நாம் இறந்ததும் இந்த உடலை வீட்டிலே வைத்துப் பாதுகாக்கிறீர்களா! அவசர அவசரமாகச் சுடுகாட்டுக் கெடுத்துச்சென்று சுட்டெரித்துப்பின்னர் ஒரு முழுக்கோடு மறந்துவிடுகின்றனர். இந்தவாழ்வையும் வாழ்வுக்குவேண்டிய பொருளையும் மாத்திரம் நாம் எண்ணிக்கொண்டு இருத்தல் ஆகாது. அருள் நெஞ்சம் உடையவர்களாக நாம் மாறவேண்டுமானால் எல்லா உயிர்களிடத்தும் அன்பைப் பெருக்கவேண்டும்.

## கரணவாயில் வள்ளுவர் விழா

உடுப்பிட்டி, வெள்ளி

கரணவாய் இளைஞர் முன்னேற்றக்கழகத்தின் 10-வது திருவள்ளுவர் நினைவு விழா இம்மாதம் 4-ம், 5-ம் திகதிகளில் கரணவாய் உபதபாற்கந்தோருக்கருகாமையில் அமைக்கப்பெற்ற நாவலர் அரங்கில் நடைபெறும்.

முதல்நாள் நிகழ்ச்சிகள் வித்துவான் க. கார்த்திகேசு தலைமையிலும், இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. எம். எம். அப்துல் காதர் தலைமையிலும் நடைபெறும். இருநாட்களும் சொற்பொழிவுகளும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. விழாவையொட்டி பேச்சு, சங்கீத, நாடகப் போட்டிகளும் நடாத்தப்பட்டுள்ளன.

## கந்தசாமி நினைவுதினம்

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கைத் தேசிய தொழிற்சங்க சம்மேளனத்தின் சார்பில் இம்மாதம் 5ந் திகதி யாழ்ப்பாணம் முற்ற வெளிமைதானத்தில் கந்சாமி நினைவுதினக் கூட்டத நடைபெறும்.

## ஆளுடையபிள்ளை . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அவசரத்தில் மரத்தில் இருந்த தேன்கூடுகள் சிதைகின்றன. சிதைந்த கூடுகளிலிருந்து பெருகும் தேன் மடுக்கள் தோறும் பாய்கின்றன. தேனைப்பருகும் வேகங்கொண்ட மீன்கள் மடுக்களில் துள்ளிப்பாய்கின்றன. அதனால் அங்கிருந்த செந்தாமரை மொட்டுக்கள் இதழ்பிண்டு அலருகின்றன இவ்வாறாக இயற்கை களிநடம்புரியும் பதியேதிருவையாறு எனக் காட்டுகின்றார் சம்பந்தப்பிள்ளையார்,

''குன்றெலாங்குயில்கூவக்
கொழும்பிரச மலர்
[பாய்ந்து
வாசம்மல்கு
தென்றலார் அடிவருடச்
செழுங்கரும்பு கண்வள
[ருந்
திருவையாறே''

இங்கே செழுமை வாய்ந்த கரும்பு வளைந்து சாய்ந்திருப்பதை ஒரு கைக்குழந்தை துயிலுவதாக உருவகித்துக் காட்டுகின்றார். மலைகளில் உள்ள சோலைக்குயில்கள் தாலாட்டுப்பாடுகின்றன. மலர்களிலுள்ள நறுமணத்தை வாரிக்கொண்டு வீசும் இளந்தென்றலாகிய தாதி கரும்புக் குழந்தையின் பாதங்களை வருடுகின்றாள். அந்த நிலையிலே கரும்புக் குழந்தைகண்வளருங்காட்சி சம்பந்தப்பெருமானது திருவையாற்றுப் பாசுரமாகிய திரையிலே நிழற்படமாகத் தீட்டப்பட்டிருக்கிறது. என்னே! இயற்கையழகு.

ஆளுடைய பிள்ளையாரது அருமைத் திருவாக்கிலே இவைபோன்ற அற்புதக் காட்சிகள் பலவுள. அப்பெருமான இப்புனித தினத்திலே அவற்றைநினைவுர்கூர்ந்து ஓதி இருமைப்பயனையும்அடைவோமாக.

## இராமகிருஷ்ண மிஷன் சபையின் கிளை யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், சனி

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய விவேகானந்த மண்டபத்தில் கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி ரங்கானந்தாவின் தலைமையில் இராமகிருஷ்ண சங்க அனுதாபிகள் பலர் கூடி யாழ்ப்பாணத்தில் ஓர் இராம கிருஷ்ணசபையை நிறுவினர். பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: ஸ்ரீ இராமகிருஷ்ணமட இலங்கைக் கிளை உபதலைவர் ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மாநந்தா. உபபோஷகர்கள்: ஸ்ரீமத்சுவாமி ரங்கானந்தாவும், ஸ்ரீராமகிருஷ்ணமடத்தை சேர்ந்த ஏனைய சுவாமிகளும், தலைவர்: டாக்டர் வி. ரி. பசுபதி, உபதலைவர்கள் திரு. சி. உ. சோமசேகரம், முதலியார் சி. முத்துத்தம்பி, திரு. ச. அம்பிகைபாகன். இணைக் காரியதரிசிகள்: திரு. கே. சதாசிவம், டாக்டர் கே. ஸி. சண்முகரெத்தினம், தனாதிகாரி: டாக்டர் கே. எஸ். பரிபூரணனந்தர்.

## புலோலி கி. ச. தேர்தல் முடிவுகள்

### அதிர்ஷ்டசிட்டிழுப்பு மூலம் ஒருவர் தெரிவு

பருத்தித்துறை, வெள்ளி

புலோலி கிராமசபைத் தேர்தல் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றது. சாளம்பை வட்டாரத்தில் போட்டியிட்ட திரு. கே. சுப்பிரமணியத்திற்கும் திரு. சின்னராசாவுக்கும் 115 சமதுண்டுகள் கிடைத்ததைத் தொடர்ந்து அதிர்ஷ்டச சிட்டிழுப்பு மூலம் திரு. கே. சுப்பிரமணியம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்

வட்டாரமும், வெற்றியடைந்தவர்களும் வருமாறு:

வண்ணாந்துறை: திரு. எஸ். நாகேஸ்.

சாளம்பை: திரு. கே. சுப்பிரமணியம்.

லட்சுமணந் தோட்டம்: திரு. கே. நல்லையா.

வணக்குடியிருப்பு: திரு. கே. சிவப்பிரகாசம்.

ஆலடி: திரு. கே. தங்கராசா.

திகிரி: திரு. எஸ். முருகமூர்த்தி.

புட்டளை: திரு. கே. சங்கரப்பிள்ளை

வகுவாவத்தை: திரு. வி. வேலுப்பிள்ளை

கற்கோவளம்: திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை

தேவரன்: திரு. செல்வத்துரை

மாரக்காய்: திரு. ரி. சிதம்பரப்பிள்ளை

துறையாமூலை: எஸ். முருகுப்பிள்ளை.

## ஐயாறன்

(4 ம்பக்கத்தொடர்ச்சி)

யார் ''சுந்தரமூர்த்தி சுவாமிகள்'' பற்றியும் பேச்சு. சனிக்கிழமை காலை மாலை ஊர்வலங்களில், மதுரை சேதுராமன் சகோதரர்களின் நாதசுர இன்னிசை.

இதையெல்லாம் பார்த்ததும் அங்கு சென்று இதில் கலந்துகொள்ள முடியவில்லையே என்று மனதில் ஒருவித ஏமாற்றமிருந்தது. ஆனால் அக்குள்ள வெயில் நினைப்பு வந்ததும், இங்கிருந்தே சிந்தையால் சென்று திருவடியடைவதே சிறந்தது என்று ஆறுதல்அடைந்தேன்.

ஆனால் ஆகாசவாணி எனும் திருச்சி வானொலி நிலயத்தாருக்கு ஒரே ஒரு வேண்டுகோள். இந்த மகோற்சவத்தையும் பெரியார்களின் பேச்சுகளையும் ஒலிபரப்பினால், அப்பாலும் அடிசார்ந்தாரான எங்களுக்கெல்லாம் எவ்வளவு இன்பமாக இருக்கும்! நமது இலங்கை வானொலி காட்டும் மேலான வழியை சற்றே இவ்விஷயத்தில் பின்பற்றக்கூடாதா?

ஃ ஃ ஃ

ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் சென்னையிலே திருவள்ளுவர் உருவச்சிலையைத் திறந்துவைத்துப்பேசுகையில், எல்லாச் சமயங்களுக்கும் மதிப்பளிப்பதே ''செக்யூலர்'' (சமயச் சார்பற்ற) கொள்கையின் கருத்து என்று இடித்து இடித்துச் சொன்னார். திருஞானசம்பந்தர் குருபூசை இவ்வளவு சிறப்பாக மதுரையில் நடப்பது, ஆகாசவாணிக்குத் தெரியாதா? தெரியுமென்றால் அவர்கள் ஏன் ஒலிபரப்பவில்லை?

அப்பர்சுவாமிகளின் குருபூசைத்தினத்தில், அவர் பாடிய தேவாரங்களைப் பாடாமல், வேறு சமய தோத்திரப் பாடல்களை ஒலிபரப்பியது இது மிக ஏமாற்றமாக இருந்தது. மற்ற நாட்களில் தேவார திருமுறைகளைப் பாடுகையில் அன்றுபார்த்துஒன்றுமில்லை! இவ்விஷயத்தில் ஆகாசவாணி சிறிது அதிக கவனமெடுத்து, சைவசமய குரவர்களின் திருநட்சத்திரங்களில் பொருத்தமான ஒலிபரப்புச் செய்யக்கூடாதா? இன்று என்ன செய்கிறார்களோ பார்க்கலாம்.

ஃ ஃ ஃ

ஒரு நல்ல செய்தி. சுழிபுரம் அன்பர் சிவப்பிரகாசமவர்கள் மதுரையிலே நேரில் கேட்டுக்கொண்டதற்கிணங்க, திருமுருககிருபானந்தவாரியார் வருகிற ஜனவரி மாதம் 17-ந் திகதி

(3-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் வந்து மூன்று நாள் பேசுவதாக ஒப்புக்கொண்டுள்ளாராம். அவர் இங்கு வந்து 7 வருடங்களாகின்றன. அவரைப் பார்க்கவும் கேட்கவும் நமக்கெல்லாம் எவ்வளவு ஆவல்!

ஃ ஃ ஃ

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம், வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக, ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே, சூழ்க வையகமும் துயர்தீர்கவே.

—திருஞானசம்பந்தர்

## எதிரி விடுதலை

காங்கேசன்துறை வெள்ளி

அராலி மேற்கைச்சேர்ந்த சபாபதி கணபதிப்பிள்ளை (வயது 19) என்னும் இளைஞன் அவ்வூரைச் சேர்ந்த சி. மகேஸ்வரி (வயது 16) என்னும் யுவதியை பாலத்காரம் செய்ய எத்தனித்ததாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் இரண்டு நாட்கள் நடந்த விசாரணையின் பின் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

சி. மகேஸ்வரி சாட்சியமளிக்கையில் சம்பவதினத்தன்று வீட்டுச்சமையலறையில் தான் தனது சகோதரியின் குழந்தைக்கு உணவூட்டிக் கொண்டிருந்த போது எதிரி அங்கே வந்து தனது வாயைப் பொத்தியவாறு தன்மீது பலாத்காரஞ் செய்ய எத்தனித்ததாகவும் தான் கூக்குரலிட்டதும் எதிரி ஓடிவிட்டதாகவும் தெரிவித்தார்.

எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு அ. குமரகுரு இச்சம்பவம் முழுவதும் கட்டுக்கதையென்றும் எதிரிக்கும் வழக்காளிக்குமிடையே ஒரு பொதுக்கிணற்றில் நிகழ்ந்த சச்சரவு காரணமாக ஏற்பட்ட மனக்கசப்பின் விளைவுதான் இந்தப் பொய் முறைப்பாட்டுக்குக் காரணம் என்றும் தனது தொகுப்புரையில் குறிப்பிட்டார். எதிரிதரப்பின் சாட்சிகளை விசாரித்த பின்னர் நீதிபதி எதிரியை விடுதல் செய்தார்

எதிரிக்காக திரு. அ. குமரகுரு ஆஜரானார் புராசிகியூஷஸ் தரப்பில் சங்கானை பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் மெண்டிசின் அனுசரணையுடன் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

## ஆசிரியருக்கு கடிதங்கள்




### யாழ்ப்பாணம் மாநகரசபை

யாழ். மாநகரசபைகலைக்கப்பட்டு ஆணையாளர் நிர்வாகம் ஏற்பட்டது வரவேற்கத்தக்கது. யாழ். மாநகர சபையில் மேயர் பதவிக்காக நடந்த தில்லுமுல்லுகளையும் அதன் விளைவாக ஏற்பட்ட நிர்வாகச்சீர்கேடுகளையும் அவதானித்தவர்கள் நகர சபை கலைக்கப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைவர்.

நகரச் சீர்திருத்தத்திற்கான நிரந்தரத்திட்டம் எதுவும் இல்லாததால் நிதி விரயமாக்கப்பட்ட சம்பவங்கள் பல. பஸ் நிலையத்தை அடிக்கடி அசைத்ததாலும், வேண்டாத சுவர்களை சந்தை நடுவே கட்டியெழுப்பி பின்னர் இடித்ததாலும்தற்காலிகசந்தைக்காக அத்திவாரம் வெட்டி ஆங்காங்கே தூண்களை நாட்டியதாலும் மற்றும் இதுபோன்ற முயற்சிகளாலும் பணம் விரயமாக்கப்பட்டதை வரியிறுப்போர் கவனித்திருப்பர். இனி மேயர் பதவிக்காக நடந்த வேட்டைகளும் பதவி ஏற்ற இறக்கவைபவங்களும் யாழ். நகரச் சீர்கேட்டை நாடெங்கும் பறை செய்தன.

பிரதான சீர்திருத்தங்கள் நிறைவேறும்வரையாயினும் ஆணையாளர்களின் நிர்வாகம் இருப்பதைப் பொது மக்கள் விரும்புவார்கள் அவர்களும் தாம் செய்கிற காரியங்களை பத்திரிகைகள் வாயிலாக அடிக்கடி வெளியிட்டுவருவது மக்களுக்கு மகிழ்ச்சி தருவதாயிருக்கும்.

க. முத்தையா
சுவாமியார் வீதி,
யாழ்ப்பாணம்.

### ஏற்கமுடியாது

ஒரே ஆளை மேயர் பதவியில் தொடர்ந்து இருக்க விடாது ஒரு சில மாதங்களுக்குள் அவரைக் கவிழ்த்து இன்னொருவரை அப்பதவிக்குச் சிருஷ்டித்து ஏற்றிஇறக்கும் திருவிளையாடல்களில் ஈடுபட்டிருந்த யாழ். மாநகர சபை உறுப்பினர்களைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் பிரதேசக் கிளை பலதடவைகளில் கண்டித்து வந்துள்ளது. நேர்மையற்ற, கேவலமான முறைகளில் குழுக்களைச் சபைக்குள் நிறுவி நிறுவிக்கலைத்து விளையாடியதையும் நாம் எப்பொழுதும் மிக வன்மையாகக் கண்டித்து வந்துள்ளோம். ஆனாலும் ஊழலையும் ஒழுங்கீனங்களையும் களைந்தெறிவதற்காகத்தான் தாம் யாழ். மாநகர சபையை உடனடியாகக் கலைத்ததாக உள்ளூராட்சி அமைச்சர் கூறியுள்ளதை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை,

ஐ இ. அரியரத்தினம்
யாழ்ப்பாணம்.

## காந்திசேவாசங்க ஆண்டுவிழா

பம்பலப்பிட்டி, வெள்ளி

அகில இலங்கை காந்தி சேவாசங்க கொழும்புக் கிளையின் 16-வதுவருடாந்த விழா இம்மாதம் 10-ம் திகதி மாலை பண்டாரநாயக்கா மாவத்தை கணபதிவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. திரு. எஸ். சோமசுந்தரம் தலைமையில் நடைபெற வருக்கும் இவ் விழாவில் வண துன்னணே சுமனதிஸ்ஸ, முதலியார் செ. சின்னத்தம்பி, திரு, எம். ஏ. திலகரத்ன, எம். எஸ். செல்லச்சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்,

அன்றைய தினம் காலை 7 மணி தொடக்கம் பண்டாரநாயக்கா மாவத்தையில் உள்ள ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பூந்தோட்டம் சிரமதானம் மூலம் அமைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் வயல்

## கண்ணீர்தான் மிச்சம்!

மலை நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டமும், வருமானக்குறைவும் தொழிலாளர் மத்தியில் விசுவரூபம் எடுத்துவருவது கண்கூடு. இந்த நிலைமையைச் சமாளிக்க மலைநாட்டில் தொழிலாளர் மத்தியில் செல்வாக்குடன் விளங்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் கழகம், தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கம் போன்ற எல்லாத் தொழிற் சங்கங்களுமே தம்மாலியன்ற முயற்சிகளை எடுத்துவருகின்றன. ஆனால் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொருமாதிரியான திட்டங்களை வைத்துக்கொண்டு ஒவ்வொரு பக்கமாக வக்கரிப்பதால் தொழிலாளியின் வாழ்வில் எந்தவித முன்னேற்றமான மாற்றமும் ஏற்படுவதாக இல்லை.

### கோரிக்கை நிறைவேறவேண்டும்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத்தொழிலாளருக்கு, வேலைசெய்யும் ஒவ்வொரு தினமும் ஒரு ரூபாய் சம்பளம் மேலதிகமாகவும், வயோதிபகாலத்தில் தொழில் செய்துள்ள காலத்தைக் கணக்கிட்டு வருடத்துக்கு ஒரு மாதச் சம்பளவீதம் சகாயப்பணம் வழங்கவேண்டும் என்றும் கோரிவருகின்றது. அதே சமயம் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் இதர தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குப் போல் தோட்டத்தொழிலாளருக்கும் ரூ. 17-50 பஞ்சப்படியாக வழங்கவேண்டும் என்று கோரிவருகின்றது. தோட்டத் தொழிலாளர்களின் பிரதான தொழிற் சங்கங்களாகிய இவற்றுக்கிடையிலேயே இவ்வளவு வேற்றுமையென்ருல் மற்றத் தொழிற்சங்கங்களின் நிலைமையைக் கூறத்தேவையில்லை.

### ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு

தொழிலாளரின் பொதுவான நன்மையைக் கருதி இந்தத் தொழிற்சங்கங்கள் எல்லாம் ஒன்றுகூடி ஏதாவது ஒரு பொதுத்திட்டத்தின் அடிப்படையில் அவர்களின் இன்னல்களைக்களைய முற்பட்டால் ஒழிய தொழிலாளியின் வாழ்க்கை ஒருபோதும் சீர்பெறவழியில்லை, தொழிலாளர்களைச் சுரண்டுபவர்களுக்குத்தான் இந்த நிலை நீடிப்பதன்மூலம் பயன் ஏற்படமுடியும்.

தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கைநிலையும், தொழில் செய்யும் சூழ்நிலையும் முப்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்த அதே நிலையில் தான் இன்னும் இருக்கின்றது. குடியிருப்பு நிலைமை குறித்துக் கூறத்தேவையில்லை, நவீன முறைப்படி 'லயன்'கள் கட்டப்பட்டபோதிலும் ஒரு வீட்டில் பல குடும்பங்களை அடைத்து வைக்கும் முதலாளிகளின் கெடுபிடி இன்னும் மாறவில்லை இதை மாற்றுவதற்கும் தொழிற்சங்கங்களால் முடியவில்லை.

### ஓடாக உழைத்து . .

மலைநாட்டு வீதிகளில் பிச்சையெடுக்கும் வயோதிபர்களில் பெரும்பாலோர் இந்திய தமிழ் வம்சாவளியினர்தான். காலமெல்லாம் தோட்டத்துக்கு உழைத்துக் கொடுத்துவிட்டு கடைசியில் தெருக்களில் இவர்கள் பிச்சையெடுக்கிருர்கள். இவர்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு அக்கறையில்லை. தொழிற் சங்கங்களுக்கும் ஒன்றும்செய்ய முடியவில்லை.

சில தோட்டங்களில் வயோதிபர்களுக்கு 'பென்ஷன்' என்ற போர்வையில் பிச்சையிடுவதுபோல் இருபது இருபத்தைந்து ரூபாய்களை மாதாந்தம் கொடுக்கிருர்கள். ஒரு தோட்டத்தில் ஐந்துபேருக்கு இந்தச் 'சந்தோஷம்' வழங்கப்பட்டால் அந்த ஐந்துபேரும் இறந்த பிறகுதான் வேறு ஐந்துபேருக்கு புதிதாக 'சந்தோஷம்' வழங்கப்படும். இது தோட்ட நிர்வாகத்தின் விருப்பு வெறுப்பைப் பொறுத்திருக்கிறது. ஏனென்ருல் இப்படி வயோதிபப் பென்ஷன் வழங்கவேண்டும் என்று சட்ட மெதுவும் இல்லை. இதிலும் ஒரு அக்கிரமம்.

### நிலைமைக்கு யார் காரணம்?

மொத்தமாகஒரு வயோதிபத்தொழிலாளி சந்தோஷப் பணத்தை வாங்கிவிட்டார் என்ருல் தோட்டத்தில் குடியிருக்கமுடியாது. வெளியேறிவிடவேண்டும். இந்தியா செல்பவர்களுக்கு இது சரிதான், ஆனால் இந்தநாட்டிலேயே இருப்பவர்கள் எங்கே போவார்கள்? கையில் பணம் இருக்கும் வரை அங்குமிங்கும் உறவினர்களுடன் இருந்துவிட்டு பணம் முடிந்ததும் பிச்சை எடுப்பதுதான் அவர்களுக்குள்ள ஒரே வழி. மொத்தமாக வாங்காமல் மாதா மாதம் வாங்குகிறவர்கள் தோட்டத்தில் தொடர்ந்து இருக்கமுடியும். ஆனால் தனியாக குடியிருப்பு அறைகள் கிடைப்பதுதுர்லபம். யாராவது உறவினருடன்தான் இருக்கவேண்டும் அப்படியே இருந்தாலும் இருபது இருபத்தைந்து ரூபாயைக்கொண்டு ஒருமனிதன் எங்ஙனம் சீவிக்கமுடியும்? எனவே அவர்களும் தெருக்களில் பிச்சையெடுக்கவந்து விடுகின்றனர்,

இந்தப் பிச்சைக்காரர்களின் பிரச்னை பெருகிவிட்டதால் நகரசபைகள் கூட அவர்களைப்பற்றி ஆலோசிக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. இல்லையென்ருல் இந்திய வம்சாவளி பிச்சைக்காரர்களைப்பற்றி மலைநாட்டிலுள்ள நகரசபைகளுக்கு எந்த அக்கறையும் ஏற்படக் காரணம் இல்லை.

இந்திய வம்சாவளிப் பிரஜைகள் பற்றிய புதிய சட்டம் நிறைவேறி இந்தப் பிரஜைகளுக்கும் நகரசபைத் தேர்தல்களில் கலந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும் போது ஒருவேளை நகரசபைகள் தெருக்களில் திரியும் இந்திய வம்சாவளிப் பிச்சைக்காரர்பற்றிநல்லமுறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளக்கூடும்.

### மறைப்பதுதான் ஒரேவழி!

வெளிநாடுகளில் இருந்து உல்லாசப் பிரயாணிகளை நம்நாட்டுக்கு ஈர்ப்பதற்கு அரசாங்கம் எவ்வளவோ முயற்சிகள் எடுக்கின்றது. அப்படி வெளிநாடுகளில் இருந்துவரும் பிரயாணிகள் நம் தெருக்களில் திரியும் பிச்சைக்காரர்களைக் காணுமல் போவதற்கும் ஏதாவது நடவடிக்கை எடுத்தால் நல்லது தெருக்களில் திரியும் பிச்சைக்காரர்கள் அனைவரும் தோட்டங்களில் காலம் எல்லாம் உழைத்து இந்த நாட்டைச் செழிக்கச் செய்தவர்கள் என்பதையும் கடைசிக்காலத்தில் பிச்சையெடுப்பதுதான் அவர்களுக்குள்ள ஒரே வழியென்பதையும் அவர்கள் அறிந்துகொண்டார்களானால் நம்நாட்டைப்பற்றியும், அரசாங்கத்தைப்பற்றியும் நல்ல அபிப்பிராயத்தோடு அவர்கள் திரும்பிப்போகமாட்டார்கள்.

# உபசரிப்பு

- பேறு -

### குடிப்பதற்கு குளிர்பானம்

''வணக்கம்'' என்ருர் வந்தவர்.

''வணக்கம், வணக்கம், வாங்கோ.....உட்காருங்கோ...'' என்று உபசரித்தேன்.

கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தபடி ''ஆமாம் உலகம் எப்படி இருக்கின்றது...'' என்று இழுத்தார்.

''உலகம் என்ன உருண்டையாக இருக்கிறது என்றுதான் விஷயம் தெரிந்தவர்கள் எல்லாம் சொல்லுகிருர்கள்'' என்றேன். அவர்முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

''அட அதைக் கேட்கவில்லை ஐயா, உலக நடப்பைப்பத்திக் கேட்கிறேன்.''

''ஓகோ அதுவா, அதைப் பத்தி என்கிட்டே கேட்டு என்ன பிரயோசனம். ஏதாவது வாரப்பத்திரிகையை வாங்கிப் படித்தால்தெரிந்து போகிறது. உங்களைப் போன்ற உலகவிஷயங்களைப் பற்றிக் கவலைப்படுகிறவர்களுக்காகத்தானேபக்கம்பக்கமாக உலகச் செய்திகளைப் பிரசுரித்துத் தள்ளுகிருர்கள் பத்திரிகைக்காரர்கள்.''

''...அதுகிடக்கட்டும் ஏதாவது லேட்டஸ்டா இருந்தால் சொல்லுங்க.''

''லேட்டஸ்டுன்னு ஒன்றுமில்லே, ஆனால் ஒரு வெஷயத்தைச் சொல்லலாம். உலகம் சமாதானத்துக்கும் யுத்த அபாயத்துக்குமிடையிலே தடுமாறிக் கொண்டு கிடக்குதாம். இப்படி நான் சொல்லலே, வத்திக்கானில் உள்ள சாட்சாத் பாப்பாண்டவரே சொல்லியிருக்கிருர்.''

''அவரு ஏன் அப்படிச் சொன்ஞர் - அதற்கு ஏதும் காரணம் இருக்க வேண்டுமே...''

''காரணம் இல்லாமலா, அமெரிக்காவோடு சண்டைபோடத் தயாராகுங்கள் என்று சீனக்காரன் அறைகூவுகிருன். அவன் ஊரிலே டாஷ்கண்ட் ஒப்பந்தத்தை முறியடித்துவிட்டதாக இந்தியாவும் பாகிஸ்தானும் ஒருத்தரை ஒருத்தர் குற்றம் சாட்டிக்கிட்டு இருக்காங்க. வியட்னும் விவகாரத்திலே அமெரிக்காவும் ரஷ்யாவும் ஒத்துப்போகிற மாதிரி இல்லே...இதையெல்லாம் பார்க்கும்போது உலகம் தடுமாறிக் கொண்டு இருக்கிறது என்று சொல்லாமல் என்னதான் சொல்லுவது...''

''வாஸ்தவமான பேச்சுத்தான்.''

''அடடா, மறந்து போனேன்...சூடா காப்பி சாப்பிடுகிறீர்களா?''

''அய்யோ வேணும். இந்த வெக்கையிலே காப்பியா?''

''அப்போ தேத்தண்ணி...''

''செச்சே ...... வேணும்.''

''கூலா வாட்டர்?''

''என்ன வாத்தியாரே, காலம் தெரியாமல் பேசுகிறீர்...நான் ஏற்கனவே 'பனைபப்ரன்' போட்டுக் கொண்டு வந்துவிட்டேன்...''

''அப்படியா சங்கதி... ஆளைவிடும்...''

நண்பர் விடைபெற்றுக் கொண்டு எழுந்தபோதுபின்னலேயே சென்று வழியனுப்பிவிட்டுத் திரும்பியபோது என் மனைவி வாசலில் நின்று கொண்டிருந்தாள் மோரும் கையுமாக.

ஃ ஃ ஃ

### சாப்பிட பதார்த்தம்

கொழும்பிலே நானும் என் நண்பரும் ஒரே ஆபிஸில் வேலை பார்த்தோம். நான் எழுத்தாளன் அல்லன். ஆனால் எழுத்துத் துறையில் கொஞ்சம் அக்கறையுள்ளவன். நண்பர் பிரபல்யமான எழுத்தாளர். அவர் விஷயங்களைத் தாங்கி வெளிவராத பத்திரிகைளோ சஞ்சிகைகளோ இலங்கையில் இருக்க முடியாது. பத்திரிகைக்காரர்கள் கேட்காவிட்டாலும் அவராகவேயாவது விஷயங்களை அனுப்பிப் பிரசுரிக்கச் செய்துவிடுவார். அந்தத் துறையில் அவ்வளவு ஈடுபாடு அவருக்கு. எனக்கு வேலைமொழிபெயர்ப்பு. நாங்கள் வேலை பார்க்கும் ஸ்தாபனத்தின் பிரசார ஏடான பத்திரிகையை 'எடிட்' செய்வது நண்பரின் வேலை.

''யதார்த்த வாதத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்'' என்று ஒரு தினம் அவர் என்னிடம் கேட்டார். அதுஎன்னபதார்த்தம்ஐயா, நான் சாப்பிட்டதும் இல்லை, அந்த வாதம் எனக்கு வந்ததும் இல்லையென்றேனே, அவர் முகத்தைப் பார்க்க வேண்டும் அப்போது!

மனித வாழ்வில்

# எண்கள் புரியும் "சர்க்கஸ்"

ஒருவருடைய தலைபோக வேண்டும் என்று விதி இருந்தால் அந்தத்தலையைக் காப்பாற்றி தலைப்பாகையோடு விதியைச் சமாளித்துவிட முடியும் என்று எண்கலை விற்பன்னர்கள் நம்புகின்றனர். அந்த நம்பிக்கையை வாசகர் மத்தியில் சற்று விரித்துச் சொல்வதே இந்தக்கட்டுரையின் நோக்கம்.

கிரகங்கள் எல்லாம் இயற்கையில் அமைந்த ஒரு நியதியின் அடிப்படையில், ஒரு குறித்தகால அமைப்புக்குள் சுழன்றும், நகர்ந்தும் ஒளிர்ந்தும், இருண்டும், மாற்றமடைந்தும் தத்தம் அமைப்புக்கேற்றுற்போல் இயங்கி தொழில்படுவதுபோலவே அக்கிரகங்களில் உண்டான பொருட்களும், உயிரினங்களும் இயங்கித்தொழில்படுகின்றனவென்றும், அவைகளின் தோற்றமும், மாற்றமும், மறைவும் அந்நியதியின்படியே நடைபெறுகின்றனவென்றும் நம்பப்படுகின்றது. இந்த அடிப்படையிலேயே மனித வாழ்க்கையின் நெளிவு சுளிவுகளுக்கு 'விதி' என்ற பெயர் ஏற்படலாயிற்று.

நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புகளினுலும், பொருளாதார மாற்றங்களாலும் மனித வாழ்க்கையிலும், சமுதாய அமைப்பிலும் வியக்கத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து வருவது கண்கூடு. ஆனால் பிறப்பு இறப்பு (தோற்றம், மாற்றம், மறைவு) என்ற இயற்கை நியதியை (அல்லது விதியை) எவராலும் வென்றுவிட முடியவில்லை. அப்படியே இறப்பு என்ற நிலைமையை மாற்றிவிட்டாலும்கூடகால ஓட்டத்தையோ, அன்றி இளமை, முதுமை என்ற வளர்ச்சி நியதியையோ எவராலும்மாற்றி அமைத்துவிடமுடியாது.

இன்று மனித அறிவின் வளர்ச்சியின் பயனுக ஏற்பட்டுவரும் கண்டுபிடிப்புகள், மாற்றங்கள், முன்னேற்றங்கள் யாவும்கூட இந்த இயற்கைத்தத்துவத்தின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் நிகழ்வதாக நம்பஇடம் உண்டு. இந்த அடிப்படையில் பார்த்தால் உலக அழிவும்கூட இயற்கைநியதியின்படி நடக்கவேண்டியதொன்ருயின் நடந்தே தீரும். இதுபற்றி இன்னும் நீட்ட வேண்டியதில்லை. நாம் ஆராயப்போகும் வுஷயத்துக்கு 'விதி'யின் தாத்பரியத்தைச் சற்றுப் புரிந்துகொண்டால் போதுமானது.

### எண்கள் நடத்தும் "சர்க்கஸ்"

ஒரு மனிதன் குறிப்பிட்ட இருவருக்குப் பிள்ளையாய்ப்பிறந்து தன்சூழ்நிலைக்கும், சமுதாய அமைப்புக்கும், வாழ்க்கை வசதிகளுக்கும் ஏற்றவகையில் அறிவு பெற்று, ஆற்றல் பெற்று, சுகஜீவனம் அல்லது கஷ்டஜீவனம் நடத்துகிருன் என்ருல், அதற்குக்காரணம் அவனுடைய 'தலைவிதி' என்று நம்மவர்கள் குறிப்பார்கள். இந்தவிதி அந்த மனிதனின் பிறப்பு (பிறந்த திகதி) எண்களைப்பொறுத்து அமைவதாக எண்கலை (எண் சாத்திரம்) மூலமாக வாழ்க்கையை ஆராய்பவர்கள் கருதுகின்றனர். இந்த எண்களின் தன்மைகள் (நன்மை அல்லது தீமை) சிலவேளைகளில் நுட்பமான காரணங்களின் அடிப்படையில் மாற்றமுறுகின்றன.

நன்மை செய்யும்போது நன்மையும் தீமைசெய்யும் போது தீமையும் இறுதிப் பலனுக விளையும் என்பது இயற்கைத்தத்துவம். ஆனால் தீமைபுரிபவன் உயர்ந்த நிலையிலும் நன்மை புரிபவன் தாழ்ந்தநிலையிலும் இருப்பதைப் பிரத்தியட்சமான வாழ்க்கையில் நாம் காணமுடிகின்றது. இதற்குரிய காரணம் யாது? அந்த மனிதனின் வாழ்வில் எண்கள் குறுக்கிட்டு 'சர்க்கஸ்' விளையாடுவதுதான் இதற்குக் காரணம் என்று அறிக. இதிலும் ஒரு விஷயத்தைக்கவனிப்போம். எண்களில், சிலவற்றை அதிர்ஷ்டகரமானவை என்றும் சிலவற்றை அதிர்ஷ்டமல்லாதவையென்றும்குறிப்பிடலாம். எனினும் அதிர்ஷ்டகரமான எண்களை பிறப்பு எண்களாகக்கொண்டவர்கள் படுமோசமான நிலையிலும் அதிர்ஷ்டமல்லாத எண்களைக்கொண்டவர்கள் நல்லநிலையிலும் இருப்பதைச் சமுதாயத்தில் காணமுடிகின்றது. பிறப்பு எண்ணுல் விளையவேண்டிய விதியை ஏதோவொரு சக்தி நுட்பமான முறையில் ஓரளவுக்கேனும் மாற்றிவிடுகின்றது என்பதுதான் இதற்குக் காரணம். அந்த சக்தி இரண்டு விதத்தில் செயல்படுகின்றது.

(மிகுதி அடுத்தவாரம்)

### ஒரு வார்த்தை

'பொன்வயல்' புதிய அம்சம். பொன்னுன பல அம்சங்களையும் திரட்டி வாசகர்கள் முன் வைத்து மகிழ்விப்பதுதான் இந்த புதிய அம்சம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம். வாசகர்களும் தம் பொன்னுன கருத்துக்களை எழுதி அனுப்பலாம். கவிதை, கட்டுரைகளும் வரவேற்கப்படுகின்றன. அடுத்த 'பொன்வயல்' பகுதி 12-6-66ல் வெளிவரும்.

முகவரி:
'பொன்வயல்',
''ஈழநாடு'',
த. பெ. 49
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரிக்கெட் டெஸ்ட்

# மேற்கிந்திய கோஷ்டிக்கு சாதகமானநிலை?

மான்செஸ்டர், ஜூன் 3

மான்செஸ்டரில நடை பெற்றுவரும் மேற்கிந்திய இங்கிலாந்து முதலாவது கிரிக்கெட் டெஸ்ட். எதிர் பாராதசிலசம்பவங்களுடன் நேற்று ஆரம்பித்திருக் கிறது.

### கிரிக்கெட் ஆரம்பம்

முதலில் துடுப்பெடுத்தா டியஹண்ட் 135 ஓட்டங்கள் எடுத்ததும். கன்ஹாய் ஓட்ட மெதுவும் எடுக்காமலே ஹக்ஸின் பந்தெறி வீச்சுக் குப் 'பலி'யானதும் ஸோ பர்ஸ் ஆட்டமிழக்காமல் (இறுதி நேரம் வரை) 83 ஓட்டங்கள் எடுத்திருந்த தும் கிரிக்கெட் ரசிகர்கள் ரசிகர்கள் எதிர்பாராத சம் பவங்களாகும்- முக்கியமாக கன்ஹாய் பூஞ்ஞியத்துடன் (00) ஆட்டமிழந்தது.!

ஆட்டம் ஆரம்பமான ஒரு மணிநேரத்துக்குள்ளாக 42 ஓட்டங்கள் நஷ்டத்து க்கு மேற்கிந்தியா இரண்டு விக்கட்டுகளை இழந்தது— ஒரு நல்ல சகுனமாகத் தோன்ருதபோதிலும் ஹண்ட்டும் ஸோபர்ஸும் ஜோடி சேர்ந்து நான்கு நான்காக ஓட்டங்களை எடுக் கத் தொடங்கியது . . . இக் கோஷ்டிக்கு ஒரு விறுவிறுப்பை ஏற்படுத் திவிட்டது.

230 நிமிடங்களில் 200 ஓட்டங்களை மேற்கிந்தியா எடுத்திருப்பது அக்கோஷ்டி யின் தரத்தைக் காட்டிவிட் டது.

### சாதகமான நிலை

கிரிக்கெட் டெஸ்டின் முதல் நாளிலேயே மேற் கிந்தியா 5 விக்கட்டுகள்நஷ் டத்துக்கு 343 ஓட்டங்கள் எடுத்திருக்கிறது. ஸோபர்ஸ் 83 ஓட்டங்களுடன் தொடர் ந்து இன்று விளையாடுகிருர். இக்கட்டத்தில் இக்கோஷ் டிக்கு சாதகமான நிலையே உருவாகியிருக்கிறது. இந்த நிலை நீடித்துமுதல் இன்னிங் ஸில் இன்று அதிக ஓட்டங் கள் எடுக்குமாளுல் மேற் கிந்திய கோஷ்டி வெற்றி பெறும்என்று சொல்லலாம்.

### சில மாறுதல்கள்

மேற்கிந்திய விக்கட் கீப் பர் ஜக்கி ஹென்றிக்ஸ் இம் முறை விளையாடவில்லை. டேர்பிக்கு எதிராக நடை பெற்ற கிரிக்கெட் போட்டி யில் இவரது விரலொன்று க்குக் காயமேற்பட்டதால் இவருக்குப் பதிலாக டேவிட் அலென் 'விக்கட் கீப்பராக' இருப்பார். காப்டன் ஸோ பர்ஸ் ஆருவது நபராக விளையாடுவார்.

### டேவிட்ஹொல்போட்

மேற்கிந்திய கோஷ்டியில் இடம்பெற்றுள்ள 26 வய துள்ள டேவிட் ஹொல் போர்ட் கிரிக்கெட் டெஸ் டுக்குப் புதியவராகும். இதே மாதிரி இங்கிலாந்து கோஷ் டியிலும் இருவர் புதிதாக இடம்பெற்றுள்ளனர்.

கிரிக்கெட் டெஸ்டுகளில் அடிக்கடி ஏற்படும் மழைக் குப் பதிலாக மான்செஸ்ட ரில் காலநிலை நன்ருகவிருப் பது கிரிக்கெட் ரசிகர்களு க்கு இம்முறை ஒரு நல்ல வாய்ப்பைஅளித்திருக்கிறது.

இரு பகுதிகோஷ்டிகளின் விபரம் வருமாறு.

### இங்கிலாந்து

எம். ஜே. கே. ஸ்மித், (காப்டன்) டி ஏ அலென். கே எவ் பரிங்டன், டி ஜே. பிறவுண், எம் ஸி. கவுட்ரி பி டி ஒலிவேரா, கே ஹிக்ஸ, ஐ ஜே ஜோன்ஸ், ஸி மில் பேர்ன், ஆர் எ பார்க்ஸ், டபிள்யு ஈ றஸ்ஸல், எவ் ஜே டிட்மஸ்

### மேற்கிந்தியா

ஹரி ஸோபர்ஸ்(காப்டன்) கொன்ருட், ஹன்ட், ஈஸ் டன் மக்மொரிஸ். ரூகன் கன்ஹாய், பேசில் புச்சர் சீமோர் நேர்ஸ், டேவிட் ஹொல்போர்ட், டேவிட் அலென், சார்ளி கிறிபித், வெஸ்ஹோல், லான்ஸ்கிப்ஸ்,

மேற்கிந்தியகோஷ்டியைப் பொறுத்த வரையில் சில எதிர்பாராத மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின் றன. பந்தெறிவீரர் கிறிபித் மேற் கிந்தியஇங்கிலாந்துகிரிக்கட் டெஸ்டில் பந்தெறிவீரராக விருக்கமாட்டாரி என்று கரு தப்பட்ட பொழுதிலும் இந்த ''முடிவு'' மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. ''அவர் தகுதியுள்ளவர்நாங் கள் பலம் வாய்ந்தவர்களைத் தான் எமது கோஷ்டியில் சேர்த்துக் கொள்வோம்'' என்று மேற்கிந்திய கோஷ்டி மனேஜர் திரு. ஜெவ் ஸ்

(8-ம்பக்கம் பார்க்க)

# மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டியின் இந்திய விஜயம்

பப்பாய், ஜூன் 3

இவ்வருட இறுதியில் இந் தியாவுக்குச் சுற்றுவிஜயம் செய்யவிருக்கும் மேற்கிந் திய கிரிக்கெட் கோஷ்டி குறிப்பிட்ட திகதிக்கு ஒரு வாரத்துக்கு முன்னதாகவே இங்கு வருமென்று எதிர் பார்க்கப்படுகிறது. டில்லி யில் நான்குநாள் கிரிக்கெட் போட்டியொன்று (புதி தாக) ஒழுங்கு செய்யப்பட் டிருப்பதே இதற்குக் காரண மாகும்.

டில்லியில் நடைபெறும் போட்டியில் மேற்கிந்திய கோஷ்டி ''பிரதமமந்திரிx'' கோஷ்டியுடன் மோதிக் கொள்ளும். ஆனுலும் இது பற்றி மேற்கிந்திய கோஷ்டி அதிகாரிகள் இன்னும்இணக் கம் தெரிவிக்கவில்லை.

மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டி இங்கு மூன்று (5 நாள்) கிரிக்கெட் டெஸ் டுகளிலும் சாதாரண (3 நாள்) போட்டிகளிலும் கலந்து கொள்ளும்.

---

## நூல்நிலைய திறப்புவிழா

உடுப்பிட்டி, வெள்ளி

''நூல்நிலையங்களை பெரிய கட்டடங்களில் அமைத்தால் மட்டும்போதாது. அவற்றை உரிய முறையில் நடாத்தி நற்பயன் அடையவேண் டும்'' என்று நெல்லியடி பட்டினசபை முன்னுள் தலை வர் திரு. வே. சு. பொன் னையா நெல்லியடி பட்டின சபை மத்திய நூல்நிலையத் தைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

திருவாளர்கள் தம்பையா, சாமுவேல், முதலாம் வட் டார அங்கத்தவர் சின் னையா சச்சிதானந்தம், செ. சுவர்ணராசா, கரைச்சி கி. ச. முன்னைள் அங்கத்த வர் திருமதி வைத்திலிங் கம் ஆகியோரும் பேசினர்.

## பூங்காவனத் திருவிழா

அளவெட்டி, வெள்ளி

அளவெட்டி கும்பளா வளைப் பிள்ளையார்கோவில் பூங்காவனத் திருவிழாநாளை பகல் அபிஷேக வைபவத்து டனும் மேள நடன இன்னி சைகளுடனும் ஆரம்பமா கும். இரவு விநாயகப் பெரு மான் பூஞ்சப்பறத்தில் பவனி வருவார்.

### டிசம்பரில்

## தி. மு. க. தேர்தல் பிரகடனம்

திருச்சி, மே 3

டிசம்பர் மாதம் சென்னை யில் நடைபெறவிருக்கும் மாகாண மகாநாட்டில் திரா விடமுன்னேற்றக்கழகத்தின் தேர்தல் பிரகடனம் வெளி யிடப்படும்.

இம்மகாநாட்டில் நியமிக் கப்படும் கமிட்டி ராஜ்யம் முழுவதுப் சுற்றுப் பிரா ணம் செய்து, கட்சியின் சார்பில் நிறுத்தப்படக் கூடிய அபேட்சகர்களைச் சிபார்சுசெய்யும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணற்றுக்குள் பாய்ந்து பெண்ணைக் காப்பாற்றினர்

## உதவிப் பொலிஸ் அதிபரின் முன்மாதிரி

யாழ்ப்பாணம், வியா.

கிணற்றுக்குள்விழுந்துஉயிருக்காகப்போராடிக் கொண்டிருந்த ஒரு பெண்ணை உதவிப்பொலிஸ் அதிபர் திரு. மகேந்திரன் காப்பாற்றியுள்ளார்.

நள்இரவு இரண்டு மணியளவில் வேலைமுடிந்துவீடு திரும்பிய யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ்அதிபர் திரு. மகேந்திரனிடம் ஒரு சிறுபையன் பரபரப்போடு வந்து தனது தாயார் கிணற்றுக்குள் விழுந்துவிட்டதாகவும் உடனடியாக காப்பாற்றும்படியும் மன்றுடினர். வேலையிலிருந் திரும்பியதால் களைப்புற்றிருந்த அதிகாரி சிரமத்தைப் பாராது ஸ்தலத்துக்குவிரைந்து சென்று பார்த்தபொழுது ஒரு பெண் 9 அடி தண்ணீருக்குள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பதைக் கண்டார். உடனடியாக கிணற்றுக்குள் பாய்ந்து அப்பெண்ணை வெளியில் கொண்டுவந்து அவரது உயிரைக் காப்பாற்றினர். இச் சம்பவம் யாழ்ப்பாணம் புகையிரதநிலையத்துக்கருகாமையிலுள்ள ஒரு இடத்தில் நடைபெற்றது. காப்பாற்றப்பட்ட 50வயதுநிரம்பிய திருமதி ராஜாவிற்கு பொலிஸ் அதிகாரி முதல் உதவி அளித்தார். (ந. நி.)

## ஆட்சேப கூட்டங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாநகர சபை கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து வட்டாரங்கள் தோறும் பொதுக் கூட்டம் நடத்த வரியிறுப்பாளர்கள் தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.

வரியிறுப்பாளர்களின் முதலாவது ஆட்சேபக் கூட்டம் கொழும்புத்துறை வட்டாரத்தில் நாளை மாலை நடைபெறவிருக்கிறது.

மாநகரசபை கலைக்கப்பட்டதையிட்டு அதிருப்தியடைந்துள்ளதாகவும், விரைவில் மாநகரசபை தேர்தலை நடாத்தும் படியும் கோரி வரியிறுப்பாளர்களில் பலர், பிரதம மந்திரிக்கு தந்தி அனுப்பியுள்ளார்களென்றும் அறியப்படுகிறது.

## திருமண அழைப்பு

கரவெட்டி இளைப்பாறிய பொதுவேலைப்பகுதி ஓவசியர் திரு. எஸ். சபாரத்தினம் அவர்களின் புத்திரி செல்வி லீலாவதிக்கும் கரவெட்டி இளைப்பாறிய அரசாங்க வைத்தியர் வி. செல்லையா அவர்களின் புதல்வன் செல்வன் செ. தருமலிங்கம் (படம் வரைஞர், நில அளவைப்பகுதி, யாழ்ப்பாணம்) அவர்கட்கும் ஜூன் மாதம் 5-ந் திகதி காலை 1-26—2-32 வரையுள்ள சுபநேரத்தில் மணமகள் இல்லத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றூர், உறவினர், அன்பர் சுற்றம் சூழவந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றேம்.

இங்ஙனம் மணமகளின் பெற்றேர் எஸ். சபாரத்தினமும் பாரியாரும், 'இரத்தினபதி', கரவெட்டி.

மணமகனின் பெற்றேர் வி. செல்லையாவும் பாரியாரும், நெல்லியடி, கரவெட்டி.

521

## "டனல்" தங்கவேலு 9-ல் யாழ். வருகிறர்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஹாஸ்ய நடிகர் 'டனல்' கே. ஏ. தங்கவேலு எம். சரோஜா கோஷ்டியினர் இம்மாதம் 9-ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வார்கள். மூன்று தினங்கள்வரைஇங்கு தங்கியிருக்குமிவர்கள், யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் மூன்று ஹாஸ்ய நாடகங்களை நடத்துவார்கள். கன்னுதிட்டி காளிகோவில் நிதிக்காக இந்த நாடகங்கள் நடைபெறுகின்றன.

## கப்பல் மூழ்கி 60பேர் மண்டனர்

சிங்கப்பூர், ஜூன் 2

இன்று சிங்கப்பூருக்கு அருகில் பிரயாணிகள் கப்பல் ஒன்று நீரில்மூழ்கி ஆழ்ந்து போனதால் 60 பேர்மாண்டு போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 40பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

## சுடுபட்டார்

சைகோன், ஜூன் 2

பிரபல பௌத்தத்தலைவ ஒருவரை இனம் தெரியாத ஒருவர் சுட்டுக்கொன்றுர் என்றும் அவர் வீதியில் நடந்துவந்தபோது சுடப்பட்டதாயும்கூறப்படுகிறது மதப் மதப்பூசலைக் கிளப்புமுகமாக வியட்காங்கியர் இக் கொலைச்செயலைச் செய்திருப்பதாக ஆஸ்திரேலிய ரேடியோ அறிவித்தது.

## மேற்கிந்திய . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டொன்மேயர் தெரிவித்திருப்பது கிறிபித்தின் திறமைக்கும் தேவைக்கும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

### கடந்தகாலத்தில்

கடந்த சில காலமாக மேற்கிந்திய கோஷ்டியே கிரிக்கெட் 'சாம்பியனு'கத் திகழ்ந்தபோதிலும் இவ் வருட 'சீஸனில்' இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சில மாறுதல்கள் இக்கோஷ்டியின் தரத்தை சிறிது உயர்த்தியிருக்கிறது.

கடைசியாக 1963-ம்ஆண்டில் மேற்கிந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே நடபெற்ற கிரிக்கெட்டெஸ்ட்டில் மேற்கிந்தியாவே வெற்றி கொண்டது. 1965-ல் ஆஸ்திரேலியாவுடன் ஏற்பட்ட "மோதலிலும்" மேற்கிந்தியா வென்றதன்மூலம் இக்கோஷ்டி ஒரு 'சாம்பியனுகி'விட்டது

மேற்கிந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே இதுவரைகாலமும் நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்டுகளின் மேற்கிந்தியா 13 டெஸ்டுகளிலும் இங்கிலாந்து 16 டெஸ்டுகளிலும் வெற்றியீட்டியிருந்தது. 16 டெஸ்டுகள் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்திருக்கின்றன. மொத்தமாக 45 கிரிக்கெட் டெஸ்டுகள் நடைபெற்றிருக்கின்றன.

— அவதானி

## பாராட்டு

நியுயோர்க், ஜூன் 3

அமெரிக்கா வெற்றிகரமாக சேர்வேயர் கிரகத்தை வானவெளியில் இறக்கியது குறித்துயுதாண்ட் பாராட்டு தெரிவித்திருக்கிறர்.

## அரசாங்க ஊழியர் சங்க ஆண்டுவிழா

மன்னர், வெள்ளி

தமிழ்பேசும் அரசாங்கப் பொது ஊழியர் சங்கத்தின் மூன்ருவது நிறைவுவிழா இம்மாதம் முதலாந் தேதி மன்னர் அர்ச். சவேரியார் கல்லூரி மண்டபத்தில் திரு. க. ராஜேந்திரம் தலைமையில் நடந்தேறியது. திருக்கோணமலையிலிருந்தும் மற்றும் பகுதிகளிலுமிருந்தும் வந்த தாய்ச்சங்க உறுப்பினர்களை மன்னர்க் கிளைத் தலைவர் திரு. பொ. நாகராஜா வரவேற்றுப் பேசினர்.

மாலையில் நடந்த பொதுக் கூட்டம் மன்னர் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டி. நேசையா தலைமையில் நடந்தேறியது. மன்னர் பட்டினசபைத் தலைவர் ஜனப் எஸ். எம். ஏ ரஹீம், அரசாங்க எழுதுவினைஞர் சங்க மன்னர்க் கிளைத்தலைவர் திரு. க. கந்தசாமி ஆகியோரும் கூட்டத்தில் பேசினர்.

நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்: திரு க ராஜேந்திரம், உபதலைவர்கள்: திரு மா சின்னத்தம்பி, திரு யோ அ அருள்ானந்தம், செயலாளர்: ம ரெத்தினம், துணைச் செயலாளர்: ச வியோ, பொருளாளர்: இ அழகரத்தினம். பொதுக் கூட்டத்தில் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன

## அ தோனியார் திருவிழா

மன்னர், வெள்ளி

மன்னரிலிருந்து 2 மைல் தூரத்திலுள்ள தள்ளாடி அர்ச். அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா ஆரம்பமாகியுள்ளது. நாளாந்த நோவினைகள், வணபிதா இல்லறி ஜெபநேசனல் நிறைவேற்றப்படுகின்றன, இத் திருவிழா 10ந் தேதி வேஸ்பர் ஆராதனையுடனும் 13ந் தேதி பாடற்பூசை சுற்றுப் பிரகாரத்துடனும் முடிவுறும். திருநாளன்றும் முதல்நாளும் வழமைபோல் ஆலயத்துக்குப் பஸ்சேவை நடைபெறுமெனத் தெரிகிறது

## சமயத்தை வளர்ப்பதில் ஆலயத்தின் பங்கு

யாழ்ப்பாணம், சனி

சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேக நினைவுமலர் சென்ற புதன்கிழமை முத்தமிழ்மணி பிரம்மஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதரால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சைவசமயத்தை வளர்ப்பதற்கு ஆலயங்களே முன்வரிசையில் நிற்கவேண்டும் என்றும்ஆறுமுகநாவலரைப் போல பிரசங்க மூலமும் எழுத்துமூலமும் சைவத்தை வளர்க்க அறிஞர்கள் முன்வரவேண்டும் என்றும் மணி பாகவதர் குறிப்பிட்டார்.

திரு. சோ. இராசரத்தினம் செட்டியார், திரு. சுப்பிரமணியம் ஆகியோர் கூட்டத்தில் பேசினர்.

## சமரக்கொடி வருகிறர்

யாழ்ப்பாணம், சனி

புரட்சிவாத சமசமாஜக் கட்சியினரால் இன்று மாலை சுன்னுகம் சந்தை மைதானத்தில் கந்தசாமி நினைவு தினக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் எட்மண்ட் சமரக்கொடி, வி. காராளசிங்கம், ஆர். பானுதேவன், மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்.

கிளிநொச்சி

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் உருத்திரபுரம் வெற்றி

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியுள்ளது.

கிளிநொச்சி ரெட்றிக்கோ மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகத்துடன் பரந்தன் விளையாட்டுக் கழகம் "மோதிக்கொண்டது. பரந்தன் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 41 ஓட்டங்கள் எடுத்தது. இதில் ஆர். ஜெகநாதன் 14, ஜி. டி. குணரத்தினம் 14 கூடுதலான ஓட்டங்கள் எடுத்திருந்தனர். இரண்டாம் இன்னிங்ஸில் இக் கோஷ்டி 18 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. எதிர் கோஷ்டியைச் சேர்ந்த என் ராஜரத்தினம் மொத்தம் 14 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 9 விக்கட்டுகளை வீழ்த்தினர். ஆர் ராஜரத்தினம் 9 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 6 விக்கட்டுகளை எடுத்தார்

உருத்திரபுரம் தனது முதல் இன்னிங்ஸில் 65 ஓட்டங்கள் எடுத்தது ஜி அப்புத்துரை 13, எஸ் கோபால கிருஷ்ணன் 26 கூடுதலான ஓட்டங்கள் எடுத்தனர் எதிர்க்கோஷ்டியைச்சேர்ந்த எம் சிவலிங்கம் 22 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 4 விக்கட்டுகளையும் ஜி டி குணரத்தினம் 21 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கட்டுகளும் வீழ்த்தினர்

### கரபந்தாட்டம்

பரந்தன், குமரபுரம் சனசமூக நிலைய மைதானத்தில் இரண்டு கரபந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன

ஒரு போட்டியில் கிளிநொச்சி பொலிஸ் கோஷ்டி விளையாடாமலே வெற்றியீட்டியது. மற்றைய போட்டியில் கிளிநொச்சி விவசாய பாடசாலை, கிளிநொச்சி பொதுசேவைக் கோஷ்டியை 15-11,15-9 புள்ளிகளால் வெற்றிபெற்றது

## "என்னை நோக்கி சுட்டார்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது

எதிரி சார்பில் அட்வக்கேட் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானர்.

சின்னையா சதாசிவம் சாட்சியமளிக்கும்போது கூறியதாவது:-

எதிரி எனது வளவிற்கு பக்கத்தில் குடி இருப்பவர். சம்பவம் நடந்த தினம் வரை எதிரியும் நானும் சந்தோஷமாக இருந்தோம் சாவகச்சேரி சென்று எனது மகளின் திருமணத்திற்குச் சாமான்களும், நகைகளும் வாங்கிக் கொண்டு அன்றுமாலை 4 மணிக்குவீட்டிற்குவந்தேன் ஐயம்பிள்ளையும் என்னுடன் வந்தார்.

அன்றிரவு 6 மணிக்கு எதிரி தனது வளவிற்குள் நின்று பேசினர் நானும் எதிர்த்துப் பேசினேன். எனது மகளுக்குத் திருமணம்செய்யக்கூடாதென்றும், திருமணம் நடப்பதைப் பார்ப்பதாகவும் எதிரி கூறினர் என் விஷயத்தில் தலையிடவேண்டாமென்றும், அவரின்வேலையைப் பார்க்கும்படியும் எதிரியிடம் றினேன் சிறிது நேரத்தால் நான் வீட்டிலிருந்த வெளிக்கிட்டு தெருவிற்குப்போனேன் எதிரியின் வீட்டைத்தாண்டிச் செல்லும்போது "நில்லடா" என்று எதிரி கூறி என்னை வீட்டிற்கு வரும்படியும் சொன்னர் நான் அவர் வீட்டிற்கு போகவில்லை 'உன்னை முடித்தபின் தான் சாப்பிடுவேன்' என்று எதிரி கூறினர் 'என்னைக்கெதியாய் முடித்துவிட்டு சாப்பிடும்படி கூறினேன். அரசாங்கம் உனக்கு துவக்கு தந்திருக்கிறதென்றும், என்னிடம் ஆயுதம் ஒன்றும் இல்லையென்றும், துவக்குடன் வந்திருப்பதால் என்னை முடித்துப்போட்டு போகும்படியும் கூறினேன்.

அச்சமயம் ஐயம்பிள்ளை வந்து 'துவக்கோடு நின்று சண்டை பிடிக்கவேண்டாம் என்று கூறி என்னைப்போகும்படி பிடித்துத்தள்ளினர் நான் பயந்து காலை எடுத்து வைக்கும்போது எதிரி துவக்கைப் பிடித்து குறிபார்த்தார் அவர் வெடிக்கமாட்டார் என நான்நினைத்தேன். உடனடியாக வெடி தீர்ந்தது எனக்கு காயம் ஏற்படவில்லை அருகில் நின்ற ஐயம்பிள்ளை நிலத்தில் விழுந்தார் நான் அவரைத் தூக்கி மடியில்வைத்திருந்தேன் கிராம சேவகர் வரும்வரை அவ்விடத்தில் இருந்தேன் அதன்பின் ஐயம்பிள்ளையை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினேம்

எதிரி சார்பில் ஆஜரான அட்வகேட் சண்முகநாதன் குறுக்குவிசாரணை செய்த போது தனது மகளுக்கு எதிரி வேறு இடத்தில் ஒரு கலியாணமும் பேசவில்லையென்றும், எதிரிக்குத் தான் திருமண அழைப்பு அனுப்பவில்லையென்றும் கூறினர்

அரசாங்க உதவி ரசாயன பரிசோதகர் திரு எஸ் சபாநடேசன், டாக்டர் வியூக்குசைப்பிள்ளை ஆகியோரும் சாட்சியமளித்தனர்

இன்று காலை 9 மணிக்கு சம்பவம் நடந்த இடமான பூநகரி நல்லூருக்கு கோர்ட்டார்விஜயம் செய்வார்கள் நீதியரசர், முடிகுரியவழக்கறிஞர், எதிரியின் வழக்கறிஞர். ஜூரிசபையினர், சாட்சி, மற்றும் பொலிசார் ஆகியோர் செல்வார்கள்

## சாவகச்சேரி இந்து முதலிடம்

சாவகச்சேரி, வெள்ளி

தென்மராட்சிப் பகுதிப் பாடசாலைகளின் சாரணர் பாசறை நிகழ்ச்சிகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி முதலிடத்தைப் பெற்றது. இரண்டாவது இடத்தை மட்டுவில் மகாவித்தியாலயமும், மூன்றுவது இடத்தை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

பாசறை நிகழ்ச்சிகள் சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சிகளில் தென்மராட்சியைச் சேர்ந்த 9 பாடசாலைகள் பங்குபற்றின. இப்பாடசாலைகளைச் சேர்ந்த 160 சாரணர்கள் கலந்துகொண்டார்கள்.

வெற்றிபெற்ற பாடசாலைகளின் சாரணர் குழுவின் தலைவர்களுக்கு திருமதி கே இராமச்சந்திரன் பரிசில்களை வழங்கினர்.

முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட சாவகச்சேரி இந்துக்கல்லூரி சாரணர் குழுத் தலைவர் செல்வன் எம் செல்வரத்தினம் கேடயத்தைப் பரிசாகப் பெற்றுக்கொண்டார்

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 4ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org